# விவிலிய மாதம்

செப்டம்பர் 2024

## விவிலிய வாரம்

23 - 28 செப்டம்பர் 2024

## விவிலிய ஞாயிறு

29.09.2024

## மையப் பொருள்

என் வார்த்தையில் நிலைத்திருங்கள்

(காண். யோவான் 8:31)

**விவிலிய மாதம் — செப்டம்பர்**

முதல் ஞாயிறு - 01.09.2024

**பணிவோடு ஏற்கப்பட வேண்டிய இறைவார்த்தை**

இரண்டாம் ஞாயிறு - 08.09.2024

**சமத்துவ வாழ்வை வலியுறுத்தும் இறைவார்த்தை**

மூன்றாம் ஞாயிறு - 15.09.2024

**செயல்பாட்டுக்கு அழைக்கும் இறைவார்த்தை**

நான்காம் ஞாயிறு - 22.09.2024

**தொண்டாற்றத் தூண்டும் இறைவார்த்தை**

# தமிழ்நாடு முப்பணி மையம்
## விவிலியப் பணிக்குழு
### ஆண்டு நிகழ்வுகள் 2024 - 2025

| நாள்கள் | தலைப்பு | பங்கேற்பாளர்கள் | நன்கொடை |
|---|---|---|---|
| 04.08.2024 முதல் | **இணைய வழி விவிலியக் கல்வி** "திருப்பாடல்கள்" (30 வகுப்புகள்) | துறவியர், பொதுநிலையினர் | ரூ. 1000/- |
| 07-08.09.2024 | விவிலியக் கருத்தரங்கு: "விவிலிய இறை வேண்டல்களில் எதிர்நோக்கு" | துறவியர் பொதுநிலையினர் | ரூ. 1200/- |
| 29-30.10.2024 | கருத்தரங்கு : "2ஆம் வத்திக்கான் சங்கத்தின் 4 கொள்கைத்திரட்டுகள்" | குருக்கள் | ரூ. 1200/- |
| 23-24.11.2024 | இறைவார்த்தைப் பணியாளர்கள் கூடுகை | | |
| 08-09.02.2025 | VBS பயிற்சிப் பயிலரங்கம், முப்பணி மையம், திண்டிவனம் | | |
| 15-16.02.2025 | VBS பயிற்சிப் பயிலரங்கம், அருள்பணி மையம், சிவகங்கை | | |
| 22-23.02.2025 | VBS பயிற்சிப் பயிலரங்கம், ஓசூர் | | |
| 12-16.05.2025 | கோடை விடுமுறை விவிலியக் கல்வி சான்றிதழ் பயிற்சி | துறவியர், பொதுநிலையினர் | ரூ. 3000/ |

**அருள்பணி. S. ஸ்தனிஸ்லாஸ்,** பொதுச்செயலர்,
தமிழக விவிலியப் பணிக்குழு

## தமிழக விவிலியப் பணிக்குழுத் தலைவரின் ஆசியுரை

இறைவார்த்தையின்பால் தாகம் கொண்டுள்ள தமிழக இறை மக்களுக்கும், இறைவார்த்தைப் பணிக்காகத் தங்களையே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுச் செயலர் தந்தையர்களுக்கும், விவிலியப் பணியாற்றும் இருபால் துறவியருக்கும், தன்னார்வமாய் விவிலியப் பணி செய்யும் அனைவருக்கும் இறை இயேசுவின் பெயரில் இனிய வாழ்த்துகள்!

2025ஆம் ஆண்டு மாபெரும் யூபிலிக்குத் தயாரிப்பாக நடப்பாண்டை இறைவேண்டல் ஆண்டு என்று நமது திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்திருப்பதை நாம் அறிவோம். அதைச் செயல்படுத்தும் விதத்தில் தமிழ்நாடு விவிலியப் பணிக்குழு சில சிறப்புச் செயல்பாடுகளை இவ்வாண்டு முன்னெடுத்துள்ளது. குறிப்பாக, இஸ்ரயேல் மக்களின் இறைவேண்டல்களின் தொகுப்பான **திருப்பாடல்கள்** மற்றும் திருவிவிலியத்தில் காணக்கிடக்கின்ற சிறந்த இறைவேண்டல்கள் இவற்றின் கருவூலங்கள் மக்களைச் சென்றடைய வேண்டுமென்று இணைய வழி வகுப்புகளும், 2 நாள் கருத்தமர்வும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன. மேலும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் “இறைவெளிப்பாடு” (Dei Verbum) என்ற கோட்பாட்டு ஏட்டினை நன்றாகத் தெரிந்துகொண்டு ஆன்மிக வாழ்வில் மறுமலர்ச்சி காணும் விதமாக பொதுநிலையினர், துறவறத்தார், அருள்பணியாளர்கள் ஆகிய அனைவருக்கும் தனித்தனியே கருத்தமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்ப்புகளை எல்லாம் நன்முறையில் பயன்படுத்தி 2025 மாபெரும் யூபிலிக்கு நம்மையே சிறப்பாக தயாரிப்போம்.

இப்பின்னணியில், இவ்வாண்டு விவிலிய ஞாயிறுக்கு மையப் பொருளாக திருத்தந்தை நமக்குக் கொடுத்திருப்பது “என் வார்த்தையில் நிலைத்திருங்கள்” (காண். யோவா 8:31) என்ற இயேசுவின் வார்த்தைகள். அதை மையமாக வைத்தே நம் விவிலிய மாதம், வாரம், ஞாயிறு கொண்டாட்டங்கள் அமையட்டும். விவிலிய மாதத்தில் உங்கள் மறை மாவட்டங்களிலும், துறவற சபைகளிலும் மற்றும் நீங்கள் சார்ந்திருக்கும் அனைத்து அமைப்புகளிலும் நீங்கள்

முன்னெடுக்கும் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் கொண்டாட்டங்களுக்கும் நெஞ்சம் நிறை வாழ்த்துக்கள்.

நாம் ஆவலோடு எதிர்பார்த்திருந்த திருவிவிலியத்தின் திருத்திய பதிப்பு கத்தோலிக்கப் பதிப்பாக வெளிவந்திருக்கும் நிலையில், மறை மாவட்டங்களிலும், துறவற சபைகளிலும் 'விவிலிய வங்கி' ஆரம்பித்து அதன் மூலம் குறைந்த விலையில் சாமானியர்க்கும் இறைவார்த்தையைக் கொண்டு சேர்க்க உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். திண்டிவனம் முப்பணி மையத்தின் விவிலியப் பணிகளுக்கு மறை மாவட்டத்தின் பங்களிப்பாக விவிலிய ஞாயிறு உண்டியல் காணிக்கையில் 50% தொகையை அனுப்ப ஆவன செய்ய வேண்டுமென்றும் மறைமாவட்டச் செயலர்களுக்கு நினைவுறுத்துகிறேன்.

*என்றும் இறைவார்த்தைப் பணியில்,*

**மேதகு ஆயர் அ. ஸ்டீபன்**
*தூத்துக்குடி மறைமாவட்டம்,*
*தமிழக விவிலியப் பணிக்குழுத் தலைவர்*

## தமிழக விவிலியப் பணிக்குழுச் செயலரின் வாழ்த்துரை

இறைவார்த்தை ஞாயிறுக்காக திருத்தந்தை நமக்குக் கொடுத்திருக்கும் 'என் வார்த்தையில் நிலைத்திருங்கள்' (காண். யோவா 8:31) என்ற மையப் பொருளை வைத்தே விவிலிய மாதம் செப்டம்பரில் நம் கொண்டாட்டங்கள் அனைத்தும், சிறப்பாக திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் இக்கையேட்டில் பரிந்துரைக்கப்படுகின்றன.

இறைவார்த்தையில் நாம் நிலைத்திருக்கும் பொழுது, அது நம் உயிர்மூச்சாகிறது; புது வாழ்வுக்கு அழைக்கிறது; நாம் விடுதலை தரும் உண்மையைக் கண்டடைந்து இயேசுவின் உண்மையுள்ள சீடராக வாழ நம்மைப் பயிற்றுவிக்கிறது (யோவா 8:31-33). இயேசுவின் வார்த்தையில் நிலைத்திருப்பது அவரில் நிலைத்திருப்பதாகும். இப்புரிதலின் அடிப்படையில் ஒவ்வொரு ஞாயிறும் ஒரு தலைப்பை மையப் பொருளாக வைத்து முன்னுரையும், மறையுரைக் குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இறுதி வாரத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு மையப் பொருளும், சிறப்பிக்கும் குழுவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. சிறப்பு செயல்பாடுகள் சிலவற்றையும் பரிந்துரை செய்திருக்கின்றோம். உங்கள் வசதிக்கேற்ப அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

விவிலிய ஞாயிறுக்குரிய கொண்டாட்ட வழிமுறைகளும் விவிலிய ஆராதனை, அருள்வாக்கு வாசிப்பு, இல்லத்தில் திருவிவிலியம் அரியணையேற்ற கருத்துரைகள் மற்றும் சிறப்பாக விவிலிய மாதத்தைக் கொண்டாடப் பரிந்துரைகள் ஆகியவை இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இதனைப் பயன்படுத்தி இந்த ஆண்டு விவிலிய மாதத்தை இனிதே கொண்டாட வாழ்த்துகிறேன்.

இக்கையேட்டினைத் தயாரிப்பதில் ஈடுபட்டு உழைத்த அருள்பணியாளர்கள் லூக்காஸ்ராஜ் (செங்கல்பட்டு), மரிய சூசை (திருச்சி), லூவா தாமஸ் (வேலூர்), வேதியர் பேரா. தி. ம. சந்தியாகு, திருமதி. வி. மேரிஸ்டெல்லா, திருமதி. சங்கீதா, செல்வி. வேல்விழி ஆகியோருக்கு நெஞ்சம் நிறை நன்றிகள்.

***என்றும் அன்புடன்,***

**அருள்பணி. S. ஸ்தனிஸ்லாஸ்,**
செயலர்,
தமிழக விவிலியப் பணிக்குழு.

## முப்பணி மைய இயக்குநரின் பேனாவிலிருந்து...

## “இறைவார்த்தையின் இன்றைய இறைவாக்கினர்கள் நீங்களே”

## (எனக்கொரு விவிலியம், இதோ! உனக்கொரு விவிலியம்)

*பதினைந்து ஆண்டுகள் மிகப் புனிதமான திருவிவிலிய மொழியாக்கத் திருப்பணிக்காகத் தன் வாழ்நாளை செலவிட்ட புனித ஜெரோம் “திருவிவிலியத்தை அறியாதவர் கிறிஸ்து இயேசுவை அறியாதவர்” என்று அனுபவித்துக் கூறியுள்ளார்.*

*கிறிஸ்துவை அறியாதவர், தெரியாதவர், அனுபவிக்காதவர் உண்மைக் கிறித்தவராக இருக்க இயலாது. இயேசுவை அறிந்துகொள்ளும் அளப்பரிய அறிவையும், ஆற்றலையும் தருவது திருவிவிலியம் மட்டுமே. திருவிவிலியத்தைத் தன் கரங்களில் ஏந்துகின்ற எந்த ஒரு மனிதரையும் அந்தத் திருவிவிலியம் அவரது வாழ்வில் எல்லாச் சூழ்நிலைகளிலும் தாங்கிக் கொள்கிறது. நம் புனிதர்களின், நல்ல மனிதர்களின் வாழ்வு நமக்குக் கற்றுத் தருகின்றது. பாடம் இது.*

*திருவிவிலியம் புனித நூல் மட்டுமல்ல ஒவ்வொரு மனிதரின் வாழ்க்கை நூலும்கூட. எனவேதான் “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்” (மாற் 16:15) என்று இயேசுவே திருமுழுக்கு பெற்ற நம் ஒவ்வொருவருக்கும் கட்டளையாகத் தந்துள்ளார். புனிதப் பவுலடியாரைப் போல” வாழ்பவன் நான் அல்ல கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்” (கலா 2:20) என்று சொல்லும் அளவுக்கு இயேசுவை அறிவிக்காவிட்டாலும், “இயேசுவே ஆண்டவர்” (உரோ 1:9,13; 1 கொரி 12:3) என்று அறிக்கையிடாவிட்டாலும், நாம் மீட்பு பெறவும், இயேசுவின் கட்டளையை நிறைவேற்றிடவும் ஆசைப்படும் மனிதர்களுக்குத் திருவிவிலியம் தந்து இறை வார்த்தையின் இறைவாக்கினர்களாக ஏன் வாழ முடியாது ?*

*ஏராளமான மனிதர்கள் இறைவார்த்தைக்காக (திருவிவிலியம்) ஏங்கிக் கொண்டும் தாகத்தோடும் உள்ளார்கள். விலை கொடுத்து வாங்க இயலாத நிலையில் இருக்கின்ற பலருக்குத் திருவிவிலியத்தைக் (இயேசுவைப் பற்றிய நற்செய்தியை) கொடுக்க நாம் ஏன் முன்வரக் கூடாது ?*

*திருவிவிலியம் காட்டும் இயேசுவை அறிவிக்க வேண்டியது நம்மேல் சுமத்தப்பட்ட புனிதப் பணி என்பதை ஏன் கட்டாயக் கடமையாக ஏற்று தேவையில் உள்ளோருக்கு திருவிவிலியம் கொடுக்கக் கூடாது ? எதற்கெல்லாமோ எவ்வளவோ செலவழிக்கும் நாம் ஏன் திருவிவிலியம் வாங்க இயலாதவர் களுக்காக உதவி செய்யக்கூடாது ?*

*“எனக்கொரு விவிலியம், இதோ ! உனக்கொரு விவிலியம்” என்ற திட்டத்தில் சேர்ந்து இரு திருவிவிலியமும் அதற்கு மேலும் தந்து “இறை வார்த்தையின் இறைவாக்கினர்களாக” வாழ்ந்திட அழைக்கின்றோம்.*

### தொடர்புக்கு


**இயக்குநர்**

*தமிழக முப்பணி மையம்*
*திண்டிவனம் - 604 001*
*அலைபேசி : 94438 46690*
E-mail : directortnbclc@gmail.com

**செயலர்**

*தமிழக விவிலியப் பணிக்குழு*
*தமிழக முப்பணி மையம்*
*திண்டிவனம் - 604 001*
*அலைபேசி : 63812 47710*
E-mail : tnbcbc1974@gmail.com

# விவிலிய மாதம், ஞாயிறு திருப்பலிகளுக்கான வழிகாட்டல்கள்

## விவிலிய மாதத்திற்கான பொதுக் கருத்து

**என் வார்த்தையில் நிலைத்திருங்கள்**

***(காண். யோவான் 8:31)***

## 01.09.2024 - பொதுக் காலம் 22ஆம் ஞாயிறு

| | | |
|---|---|---|
| **மையக்கருத்து** | : | **பணிவோடு ஏற்கப்பட வேண்டிய இறைவார்த்தை (யாக்கோபு 1:21)** |
| **முதல் வாசகம்** | : | இணைச் சட்டம் 4:1-2, 6-8 |
| **பதிலுரைப் பாடல்** | : | திருப்பாடல் 15:2-3a, 3bc, 4ab, 5 |
| **இரண்டாம் வாசகம்** | : | யாக்கோபு 1:17-18, 21b-22, 27 |
| **நற்செய்தி வாசகம்** | : | மாற்கு 7:1-8, 14-15, 21-23 |

**திருப்பலி முன்னுரை**

விவிலிய மாதமாம் செப்டம்பர் மாதத்தில் விவிலியத்தின் வழியாகக் கடவுள் நம்மோடு உரையாடுவதை, உறவாடுவதைக் கொண்டாட அழைக்கிறார் நம் திருத்தந்தை பிரான்சிஸ். திருவிவிலியத்தின் கருவூலங்களை நாம் அறிந்து ஞானத்திலும் அறிவிலும் சிறந்து விளங்கிடவும், நற்கருணை கொண்டாட்டத்தில் பொருளுணர்ந்து பங்கேற்கவும் அழைக்கிறார் ஆண்டவர். இறைவார்த்தை வழியாகத் தனி மனித மற்றும் சமூக விழுமியங்களை, நடைமுறைப்படுத்தி மாண்புக்குரிய மக்களினமாக மனிதர்களை உருவாக்கவே ஆண்டவர் விரும்புகிறார். இதனையே ஒவ்வொரு திருப்பலியிலும் விவிலிய விருந்தின் வழியாக நமக்குப் படைக்கிறார். கடவுள் நம் மூதாதையரோடு உரையாடி, உறவாடி உடனிருந்து வலிமைப்படுத்தியதை விவிலியம் விளக்கமாகக் கூறுகிறது. அதே வேளையில் நமது தமிழக ஆயர் பேரவையும் விவிலியம் கூறும் செய்திகளை சமூக, சமயப் பார்வையில், தனி மனித மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக திருஅவையின் பாரம்பரிய வழியில் பல்வேறு தலைப்புகளில் இம்மாதத்தில் ஞாயிறு தோறும் கொண்டாட அழைக்கிறது. நாம் கடவுள் - மனித உறவில் நிலைத்திருக்க உதவும் இறைவார்த்தையைப் பணிவோடு ஏற்று, நமது வாழ்க்கைச் சூழல்களுக்கு ஏற்ப பயன்படுத்துவது நமது கடமையாகும். இதை மனத்தில் இருத்தி இன்றையத் திருப்பலியில் முழுமையாகப் பங்கேற்போம்.

**மறையுரைக் குறிப்புகள்**

- தம் வார்த்தைகளுக்கு பணிவோடு செவிசாய்த்து பேரின்பத்தில் நிலைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட முதல் பெற்றோராகிய ஆதாம் - ஏவாள் பாவம் செய்தனர்.
- திருப்பலியில் வாசிக்கப்படும் வாசகங்கள் அன்றாட வாழ்வின் நிகழ்வுகளுக்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் பதிலளிக்கின்றன.
- ஆண்டவரின் கட்டளைகளின்படி வாழ்ந்தால், அவர் வழங்கும் நாட்டை உரிமையாக்கிக் கொள்ளலாம் (முதல் வாசகம்).
- அவர் நம் குரலுக்குப் பதிலளிப்பார். அவர் நம் அருகாமையில் இருப்பதை உணரலாம்.
- ஆண்டவரது குரலுக்குச் செவிமடுத்து வாழும் மானிடர் ஆண்டவரின் திருமலை, கூடாரத்தில் சென்று வழிபடுவர் என்கிறார் திருப்பா ஆசிரியர்.

**பணிவோடு ஏற்றுக்கொள்ளப்படும் இறைவார்த்தை கற்பிப்பவை**

அ. கடவுள் மாறாதவர்.

ஆ. நல்ல கொடைகளால் நம்மை நிரப்பியுள்ளார்.

இ. ஒளியின் பிறப்பிடமே ஆண்டவர்.

ஈ. இறைவார்த்தையால் நம்மை தந்தை ஈன்றெடுத்துள்ளார்.

உ. நம்மை முதற்கனிகளாக்கவே விரும்புகிறார்.

ஊ. அழுக்கையும் தீமையையும் அகற்றி தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எ. இறைவார்த்தையை உள்ளத்தில் தாங்க வேண்டும்.

ஏ. இறைவார்த்தையைக் கேட்க வேண்டும்.

ஐ. இறைவார்த்தையைச் செயல்படுத்த வேண்டும்.

ஒ. துன்புறுவோருக்கு உதவ வேண்டும்.

ஓ. உலகத்தால் கறைபடியாதவாறு தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும்.

**சிந்தனைக்கு**

1. இறைவார்த்தையைப் பணிவோடு ஏற்கக் கூடிய திறந்த மனமும், தாழ்ச்சியும் என்னிடம் உள்ளதா? அல்லது எனக்கு எல்லாம் தெரியும் என்ற மனநிலையே இருக்கின்றதா?
2. இறைவார்த்தையைப் பணிவோடு ஏற்றுப் பயணித்தவர்கள் பற்றி ஆதாரத்துடன் பரப்புரை செய்வோமா?

## 08.09.2024 - பொதுக் காலம் 23ஆம் ஞாயிறு

**மையக்கருத்து** : **சமத்துவ வாழ்வை வலியுறுத்தும் இறைவார்த்தை (யாக்கோபு 2:1-5)**

**முதல் வாசகம்** : எசாயா 35:4-7a

**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 146:7, 8-9a, 9bc-10

**இரண்டாம் வாசகம்** : யாக்கோபு 2:1-5

**நற்செய்தி வாசகம்** : மாற்கு 7:31-37

**திருப்பலி முன்னுரை**

விவிலிய மாதமாம் செப்டம்பர் மாதத்தின் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையாகிய இன்றைய வழிபாட்டில் "சமத்துவ வாழ்வை வலியுறுத்தும் இறைவார்த்தை" என்ற மையப் பொருளில் திருப்பலி கொண்டாடிட மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். ஆண்டவருடைய செயல்பாடுகள், அறிவிப்புகள், மதிப்பீடுகள், வெளிப்பாடுகள் ஆகியவை அனைவருக்குமானவை. ஆண்டவர்தாமே ஏழைகள், துன்பப்படுவோர், சிறையிலிருப்போர் என ஒவ்வொரு வருக்குமான மனித மாண்பினை உறுதிப்படுத்துகிறார். எனவே தான் அனைவரும் சமமானவர்கள், மதிப்பிற்குரியவர்கள், மாண்புடையவர்கள் என அறிவிப்புச் செய்கிறார். பொருள், பதவி, அதிகாரம், ஆற்றல் போன்றவற்றால் மனித மாண்பு நசுக்கப்படும்போது, புறக்கணிக்கப்படும் போது, தம் கண்டனத்தையும் தெரிவிக்கிறார்; தண்டனையும் தருகிறார். அனைத்து மனிதர்களையும், மனித மதிப்பீடுகளோடு, மாண்போடு, மரியாதையோடு நடத்த வேண்டும். இதனைச் சுட்டிக்காட்டும் இறைவார்த்தையின் அழைப்பினைச் செயலாக்கம் செய்திட வழிகாட்டுதல் வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**மறையுரைக் குறிப்புகள்**

- கடவுள் விரும்பும் சமத்துவ சமூகம் சார்ந்த வெளிப்பாட்டினை அறிந்துகொள்ள நாம் அழைக்கப்படுகிறோம்.
- கடவுள் மக்களைச் சந்திக்க வருகையில் அநீதியை அழிப்பார்; நேர்மையாளர்களை விடுவிப்பார். உடல் சார்ந்த குறைகளைப் போக்குவார். இயற்கைக்கும் ஆசி வழங்குவார். இறை மக்களுக்கான 'தூய வழி' எனும் நேர்வழியை உருவாக்குவார்.
- சமத்துவ வாழ்வுக்கான முன்னெடுப்புகளைச் செயலாக்கம் செய்திடும் ஆண்டவரை போற்றுகின்ற திருப்பாடல் ஆசிரியர் வழியில் நாமும் செயல்படுவோம்.
- ஆண்டவரின் செயல்பாடுகளில் காணப்படும் பரிவு, இரக்கம், பேரன்பு போன்றவை அனைவருக்கும் சமமானவை.

- இயேசுவின் சமத்துவச் செயல்பாடுகள்:
  குறைபாடுள்ளவருக்கு உரிய கவனம் செலுத்துதல்.
  அவரோடு தனியாக நேரத்தை செலவிடுதல்.
  குறைபாடுள்ளவரைத் தொடுதல்.
  குறைகளைப் போக்கிட, குணப்படுத்துதல்.
- தொடக்கக் கால கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் சமத்துவ சிந்தனையை சவாலோடு செயல்படுத்த முயன்றிருக்கிறார்கள் என்பதே இந்நாளின் நேர்மறையானச் செய்தியாகும்.
- ஏழை - செல்வர் எவ்வாறு சமூக - சமய - ஆன்மீகப் பார்வையில் பார்க்கப்படுகின்றனர் என்பதை திருத்தூதர் யாக்கோபு சுட்டிக்காட்டுகிறார் (இரண்டாம் வாசகம்).
- இன்றைய ஏழைகள் - நாளைய செல்வந்தர்கள்; இன்றைய செல்வந்தர் - நாளைய ஏழைகள். செல்வத்தால் ஒருவர் மதிப்புப் பெறுவதில்லை. மாறாக கிறிஸ்துவின் மாட்சியால் மதிப்புப் பெற வேண்டும் என்பதே இன்றைய அழைப்பு.
- செல்வம் கடவுளுடைய இடத்தைப் பெறக் கூடாது. ஏழைகள் கடவுளுக்குரிய இடத்தைத் தர வேண்டும். செல்வந்தர் கடவுளுக்குரிய இடத்தில் தங்களைக் கருதுவதை எதிர்க்கிறது சமத்துவச் சிந்தனை.
- கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை. அவருடைய மக்களாகிய நாமும், எல்லாரும் கடவுளின் மக்கள் என்ற சமத்துவப் பார்வையில் நிலைத்திருக்க வேண்டும்.
- உலகப் பார்வையில் தரம் குறைந்த காணப்படுவோரையும் அவர்களது அன்பை முன்னிட்டு கடவுள் உரிமைப் பேற்றுக்கு உயர்த்துகிறார்.

**சிந்தனைக்கு**

1. சமத்துவ வாழ்வை வலியுறுத்தும் இறைவார்த்தைகள் எல்லாருக்கும் அறிவிக்கப்படுகின்றனவா?
2. இறைவார்த்தையை அறிவிப்பவர் வாழ்வில் சமத்துவம் வெளிப்படுகின்றதா?

## 15.09.2024 - பொதுக்காலம் 24ஆம் ஞாயிறு

**மையக்கருத்து** : **செயல்பாட்டுக்கு அழைக்கும் இறைவார்த்தை (யாக்கோபு 2:14-18)**

**முதல் வாசகம்** : எசாயா 50:5-9a

**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 116:1-2, 3-4, 5-6, 8-9

**இரண்டாம் வாசகம்** : யாக்கோபு 2:14-18

**நற்செய்தி வாசகம்** : மாற்கு 8:27-35

**திருப்பலி முன்னுரை**

"நம்பிக்கை" நாம் இலவசமாக பெற்றுக்கொண்ட கடவுளின் கொடை. 'என் இறைநம்பிக்கையை சிதைக்காதே. நான் செத்த வனாகிடுவேன்' என்கிறார் காந்தியடிகள். ஆழமான இறை நம்பிக்கை நல்வாழ்வின் ஆரம்பம் என்கிறார் புனித அகுஸ்தினார். நம்பிக்கை கடவுளின் கொடை (எபே 2:8). இத்தகைய நம்பிக்கையைக் கொடையாக கொடுத்த இறைவனுக்கு நன்றி கூறுவோம். தன்னம்பிக்கை, பிறர் நம்பிக்கை, இறை நம்பிக்கை உள்ளவர்கள் வேருள்ள மரத்திற்கு சமம். நம்பிக்கையோடு புண்ணிய காரியங்கள் அல்லது நல்ல காரியங்கள் செய்யும்போது நாம் புனிதராகிறோம். இதற்கு இறைவார்த்தை என்னும் அருமருந்து தேவைப்படுகிறது. வாழ்வில் நாம் சந்திக்கும் சவால்கள், போராட்டங்கள், கவலைகள் நம்மை வீழ்த்தும்போது இறைவார்த்தை நமக்கு உயிரோட்டம் தந்து வெற்றியின் பாதையில் பயணிக்க உதவுகிறது. நம்பிக்கையோடு நற்செயல் புரிவோம். இறைவார்த்தையை நமது பலமுள்ள ஆயுதமாகக் கருதுவோம்; இறையருளைப் பெறுவோம்.

**மறையுரைக் குறிப்புகள்**

- நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கியிருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி; கண்ணுக்கு புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை (எபி 11:1). ஆம். கடவுள் இவ்வுலகைப் படைத்தார். அதுவும் வார்த்தையினால் உருவாக்கினார் என்கிறது தொடக்க நூல். அசைக்க முடியாத பாரவோனின் அடக்குமுறையிலிருந்து இஸ்ரயேல் மக்களை விடுவித்துச் செங்கடலை இரண்டாகப் பிளந்து, இஸ்ரயேல் மக்களைக் கடக்கச் செய்தது இறைவன் செயலில் வல்லவர் என்பதைத் தெளிவாக்குகிறது.
- கடவுள் வார்த்தை வடிவில் செயல்பட்டு, அவ்வார்த்தையே கடவுளாயும் இருந்து, மனிதராகப் பிறந்தார். இறைமகனாகிய இயேசுவே மெசியா என நாம் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே நற்செய்தி நூல்கள் நமக்கு உதவுகின்றன (யோவா 1). இதை உறுதிப்படுத்துவதற்காக இன்றைய வாசகம் நமக்கு வலுச்சேர்க்கிறது. இத்தகைய சூழலில், கிறிஸ்துவை நம்புகிறோம். ஆனால் கிறிஸ்துவுக்காக நாம் வாழ்வதில்லை. இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையை அறிக்கையிடு கிறோம். ஆனால் செயல் வடிவம் கொடுக்கிறோமா என்பதுதான் இன்றைய கேள்வி.

**சிந்தனைக்கு**

1. **செயலிழந்த நம்பிக்கை :** நற்செயல் இல்லாமல் நம்பிக்கை கொள்ள முடியுமா? திருமுழுக்குப் பெற்ற அனைத்துக் கிறிஸ்தவர்களும் விண்ணகம் செல்ல முடியுமா? பக்தி முயற்சிகள் மட்டுமே ஒருவரது நம்பிக்கையின் வெளிப்பாடு எனக் கூற முடியுமா? நன்மை செய்யாமல் நம்பிக்கைக் கொள்வது செயலிழந்த நம்பிக்கை என இறைவார்த்தை கூறுகிறது (யாக்கோபு 2:17, 20, 26). நிலைவாழ்வைப் பெற செயல் அவசியம் (காண். மத்தேயு 19:21-22).

புனித அகுஸ்தினார் கூறுகிறார் : "மனிதர் கடவுளையும், அவரது வாக்குறுதிகளையும் நம்பும்போது அவர் நம்பிக்கையாளர் ஆகிறார். அதுபோல கடவுள் மனிதருக்குத் தாம் வாக்களித்ததை தரும்போது நம்பிக்கையானவர் ஆகிறார். ஆகவே நாம் கேட்பதை கடவுள் கொடுப்பதன் மூலம் கடவுளின் செயல் நம்மில் வெளிப்படுகிறது. எரேமியா 1:2 "உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கிறேன்." நம்மோடு இருப்பதே கடவுளின் செயல்.

2. **இறைவார்த்தை - செயலாக்கத்திற்கான உந்து சக்தி :** கடவுள் வார்த்தை வடிவில் பேசினார், வாக்கு கடவுளாக இருந்தது (யோவா 1:1), இறைவார்த்தை வாழ்வு தந்தது. கடவுளின் வாக்கு ஒளியாகவும் உண்மைக்கச் சான்றாகவும் இருந்தது.

   இறைவார்த்தையை உள்வாங்குவோரின் கண்களைக் கடவுள் திறக்கிறார். இதயத்தையும் தொடுகிறார். "கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது ஆற்றல் வாய்ந்தது" (எபிரேயர் 4:12).

   புனித அகுஸ்தினாருக்கு வெளிப்பட்டது "எடுத்து வாசி", "எடுத்தார், வாசித்தார், மனமாறினார்." புனித பவுலின் வார்த்தையைக் கேட்ட பலர் மனம் மாறினர். ஏனென்றால் பவுல் பேசியது கடவுளின் வார்த்தை "ஆண்டவர் அவர்களது உள்ளத்தைத் திறந்தார்" (திப 16:14), இறுதியாக, கடவுளோடு இருப்பவர்கள் கடவுளின் இயல்பை வெளிப்படுத்துகிறார்கள். இறைவனது வார்த்தை நம்மை நம்பிக்கைக்கு மட்டுமல்லாமல் செயலாக்கத் திற்கான உந்து சக்தியைத் தந்து புது வாழ்வுக்கும் அழைத்துச் செல்கிறது.

## 22.09.2024 - பொதுக் காலம் 25ஆம் ஞாயிறு

**மையக்கருத்து** : **தொண்டாற்றத் தூண்டும் இறைவார்த்தை (மாற்கு 9:30-37)**

**முதல் வாசகம்** : சாலமோனின் ஞானம் 2:17-20

**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 54:1-2, 3, 4, 6

**இரண்டாம் வாசகம்** : யாக்கோபு 3:16-4:3

**நற்செய்தி வாசகம்** : மாற்கு 9:30-37

### திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் இனியவர்களே, இறைவன் மனிதரோடு பேசும் இனிய, எளிய மொழியே இறைவார்த்தை. இறைவார்த்தை வாழ்வளிக்கும் சக்தி வாய்ந்தது. பிறருக்கு வாழ்வளிக்கும் சக்தியாக நம்மை மாற்றக் கூடியது. இறைவனின் வார்த்தையை இதயத்தில் தாங்கி நிற்பவர்கள் இறையன்பும் பிறரன்பும் இரண்டறக் கலந்தவர்களாக கிறிஸ்துவின் மனநிலையில் வேரூன்றியவர் களாகத் தங்களை உலகில் அடையாளப் படுத்திக் கொள்கிறார்கள். 'நான் வாழ்ந்தாலும இறந்தாலும் அது கிறிஸ்துவுக்காகவே' என்று வாழ்ந்த திருத்தூதர் பவுல் முதல், 'இறக்கத்தானே போகிறோம் இரக்கத்தோடு வாழ்வோம்' என்ற புனித

அன்னை தெரசாவரை அனைவரும் இறைவார்த்தையை இதயத்தில் தாங்கி பிறரன்புப் பணிகளில் தங்களை கரைத்துக் கொண்டவர்களே. இன்றைய இறைவார்த்தை வழிபாடு நம்மை 'உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும்' என்ற அன்னை மரியாவைப்போல தொண்டாற்ற, பிறர் நலன் விரும்பிகளாக வாழ அழைப்பு விடுக்கின்றது. 'உங்களுள் பெரியவராக' இருக்க விரும்புகிறவர் பணிவிடை புரிபவராகவும், தொண்டு ஆற்றுபவராகவும் இருக்கட்டும்' என்ற கிறிஸ்துவின் மனநிலை நமதாகட்டும். நாம் வாசிக்கின்ற நற்செய்தி, கேட்கின்ற இறைவார்த்தைகள் நம்மைப் பணிவிடை புரியத் தூண்டட்டும். நாம் பெற்றுக் கொண்ட இறையன்பை பிறரன்பின் வழியாய் வெளிப்படுத்த இறையருள் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**மறையுரைக் குறிப்புகள்**

- பெரிய பதவியில் இருக்க வேண்டும் அல்லது பெரிய பதவியில் இருப்பவர்களோடு இணக்கமாக இருக்க வேண்டும். இதுதான் இன்றைய எதார்த்த மனநிலை.
- நீ பெரியவனாய் இருக்குமளவுக்குப் பணிந்து நட. அப்போது ஆண்டவர் முன்னிலையில் உனக்குப் பரிவு கிட்டும் (சீஞா 3:18).
- உங்களுள் பெரியவர் சிறியவராகவும், ஆட்சிபுரிபவர் தொண்டு புரிபவராகவும் மாற வேண்டும் (லூக் 22:26).
- தொண்டாற்றும் கொடையை நாம் பெற்றிருந்தால் அதைத் தொண்டு புரிவதற்குப் பயன்படுத்த வேண்டும் (உரோ 12:7).
- முதன்மையாக இருக்க வேண்டும் என்ற நோக்கம் நம்மை முன்னேற்றத்தை நோக்கி பயணிக்க தூண்டுகிறது.
- முன்னேற்றத்தின் வளர்ச்சி என்பது தனிமனித வளர்ச்சி என்பதைக் கடந்து சமூக வளர்ச்சி ஆகும்.
- தன்னைச் சார்ந்தோரை வளர்த்துவிடுவது உண்மையில் தலைவருக்குரிய பண்பு.
- மற்றவரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பெரியவர் என்னும் மனநிலை நம் சுய உணர்வை தூண்டிவிடுகிறது.
- அனைவரும் கடவுளின் முன் சமம் என்னும் மனநிலை இருந்தால், நம்மைப் போல் சக மனிதர்கள் அனைவரையும் ஏற்று அவர்களுக்குத் தொண்டு செய்து இறைவார்த்தை காட்டும் வழியிலும் ஒளியிலும் பயணிப்போம்.

**சிந்தனைக்கு**

1. பெயருக்காகவும் புகழுக்காகவும் பிறரன்புப் பணிகளை முன்னெடுக்கின்றேனா?
2. 'தொண்டு புரியவே வந்தேன்' என்ற இயேசுவின் பாதையில், பிறருக்கு உதவிகள் செய்திடத் தயார் நிலையில் நான் இருக்கின்றேனா?

## தமிழ்நாடு விவிலியப் பணிக்குழு

2 நாள் கருத்தரங்கு :

**தலைப்பு : விவிலிய இறைவேண்டல்கள்**

**நாள்** : 07–08 செப்டம்பர் 2024
(சனி, ஞாயிறு)

**பங்கேற்பாளர்கள்** : துறவியர்,
பொதுநிலையினர்



**கட்டணம்** : ரூ. 1200/– மட்டும்

**இடம்** : முப்பணி மையம், திண்டிவனம்


தொடர்பு கொள்ள

அலைபேசி : 63 81 24 77 10
90 80 03 08 75
E-mail : tnbcbc1974@gmail.com

## தமிழ்நாடு விவிலியப் பணிக்குழு

அஞ்சல்வழி விவிலியக் கல்வி

**இரண்டு ஆண்டுகள்**
**சான்றிதழ் பயிற்சி**
**கட்டணம் : ரூ. 1000/– மட்டும்**



தொடர்பு கொள்ள

அலைபேசி : 63 81 24 77 10
90 80 03 08 75
E-mail : tnbcbc1974@gmail.com

# விவிலிய வாரநாள்களுக்கான திருவழிபாட்டுக் குறிப்புகள்

- **அந்தந்த நாளுக்குரிய திருக்குழும, காணிக்கைமீது, திருவிருந்துக்குப்பின் மன்றாட்டுகளையும் வாசகங்களையும் மாற்றாமல் பயன்படுத்திக்கொள்ளவும்.**
- **தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ப சிறப்பிக்கும் குழுவை மாற்றிக் கொள்ளலாம்**

## 23.09.2024 - திங்கள்

| | | |
|---|---|---|
| **மையப்பொருள்** | : | **இறைவார்த்தையில் நிலைத்திருப்பது: இறைவார்த்தையை உயிர் மூச்சாய்க் கொள்வது** |
| **சிறப்பிக்கும் குழு** | : | பங்கில் உள்ள முதியவர்கள் |
| **முதல் வாசகம்** | : | நீதிமொழிகள் 3:27-35 |
| **பதிலுரைப் பாடல்** | : | திருப்பாடல் 15:2-3அ, 3ஆ, இ-4, 5 |
| **நற்செய்தி வாசகம்** | : | லூக்கா 8:16-18 |
| **சிறப்புச் சிந்தனை** | : | ஒளிரும் தீபங்கள் நாமாவோம் |
| | | உறக்கமில்லா கட்டில், பாரமான தலையணை, ஈரமான கண்களோடு, வாசலை உற்றுநோக்கி, பிள்ளைகளின் வரவை எதிர்நோக்கி வீட்டிலும் முதியோர் இல்லத்திலும் காத்திருக்கும் முதியோருக்கு ஆறுதலாய் அமைவது இறைவனின் வார்த்தைகளே. உயிர் மூச்சளிக்கும் இறை வார்த்தைபோல உடன் இருக்கும் முதியோரை கவனித்துக் கொள்ள முயற்சி எடுக்கிறோமா? |

## 24.09.2024 - செவ்வாய்

| | | |
|---|---|---|
| **மையப்பொருள்** | : | **இறைவார்த்தையில் நிலைத்திருப்பது: இயேசுவில் நிலைத்திருப்பது** |
| **சிறப்பிக்கும் குழு** | : | பெற்றோர் |
| **முதல் வாசகம்** | : | நீதிமொழிகள் 21:1-6, 10-13 |
| **பதிலுரைப் பாடல்** | : | திருப்பாடல் 119:1, 27, 30, 34, 35, 44 |
| **நற்செய்தி வாசகம்** | : | லூக்கா 8:19-21 |

**சிறப்புச் சிந்தனை** : இயேசுவின் உறவுகள் நாமாவோம்

இரு கை தட்டினால்தான் ஓசை வரும். அதுபோல பெற்றோர்கள் இருவரும் இணைந்து இருந்தால் தான் பிள்ளைகளின் வாழ்வில் இன்பம் என்னும் ஒளி பிறக்கும். நாம் தேடிச்சென்றாலும் விலகிச் செல்லும் பிற மனித உறவுகள் மத்தியில் நம்மைத் தேடி வரும் ஒரே சொந்தம் பெற்றோர்கள் மட்டுமே. பெற்றோருடனான உறவுகளைக் கட்டி எழுப்பும் இயேசுவின் சாயல்களாக இறையாட்சித் தடம் பதிக்கின்றோமா?

## 25.09.2024 - புதன்

**மையப்பொருள்** : **இறைவார்த்தையில் நிலைத்திருப்பது: புதிய வாழ்வு முறைகளைக் கைக்கொள்வது**

**சிறப்பிக்கும் குழு** : இளையோர்

**முதல் வாசகம்** : நீதிமொழிகள் 30:5-9

**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 119:29, 72, 89, 101, 104, 163

**நற்செய்தி வாசகம்** : லூக்கா 9:1-6

**சிறப்புச் சிந்தனை** : கிறிஸ்துவின் மனநிலை நமதாகட்டும்

இளையோர் நமது சமூகத்தின் முதுகெலும்பு. இளையோரின் எழுச்சிமிகு சிந்தனையாலும் சிறப்புமிகு செயல்பாடுகளாலும் ஒவ்வொரு சமூகமும், நாடும் வளர்ச்சி நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றன. புதியவற்றைப் புனைவதும் பழையவற்றை மாற்றுச் சிந்தனைகளோடு ஏற்றுக் கொள்வதும் இளையோருக்கு எப்போதும் எளிதாகவே இருக்கிறது. இளையோரின் ஆற்றலும் சக்தியும் சமூக ஊடகத் தளங்களால் சிதைக்கப் படுகின்றன. இதற்கு மாற்று என்ன?

## 26.09.2024 - வியாழன்

**மையப்பொருள்** : **இறைவார்த்தையில் நிலைத்திருப்பது: இயேசுவின் உண்மைச் சீடராக வாழ்வது**

**சிறப்பிக்கும் குழு** : சிறார்கள்

**முதல் வாசகம்** : சபை உரையாளர் 1:2-11

**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 90:3-4,5-6, 12-13, 14, 17ஆ,இ

**நற்செய்தி வாசகம்** : லூக்கா 9:7-9

**சிறப்புச் சிந்தனை** : இறையாட்சியின் நாயகராம் கிறிஸ்துவின் சீடர் நாமாவோம்.

குழந்தைகள் காணும் உலகத்தை அவர்களின் கண் கொண்டு நாமும் காணக் கற்றுக் கொண்டால் அலை நடுவே அமைதியாய் பயணிக்கும் கப்பல் போல அழகாய் அத்தனையையும் கடந்து செல்லும் இயேசுவின் சீடர்கள் நாமாவோம். மகிழ்ச்சியையும் மன நிறைவையும் வருங்காலத் தலைமுறையினரான நிகழ்கால குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க இன்று நம்மால் சாத்தியமாகின்றதா?

## 27.09.2024 - வெள்ளி

**மையப்பொருள்** : **இறைவார்த்தையில் நிலைத்திருப்பது: உண்மையைக் கண்டடைந்து விடுதலை பெறுவது**

**சிறப்பிக்கும் குழு** : பங்கில் உள்ள துறவறத்தார், பிறர் அன்பு பணி செய்யும் இயக்கங்கள்

**முதல் வாசகம்** : சபை உரையாளர் 3:1-11

**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 144:1அ, 2ஆ,இ, 3-4

**நற்செய்தி வாசகம்** : லூக்கா 9:18-22

**சிறப்புச் சிந்தனை** : விழிப்புடன் செயல்படும் விடுதலைவிரும்பிகள் நாமாவோம்.

கிறிஸ்துவின் இறையன்பு, பிறரன்பு மனநிலையைத் தமதாக்கி, அடுத்து வாழும் உறவுகளை அண்ணன் தம்பிகளாக ஏற்று, இருப்பதைப் பகிர்வதன் வழி இல்லாதோரின் இருத்தலாக மாறுவதை தங்கள் இலக்காகக் கொண்ட சமூக மாற்றத்தின் சக்திமிகு ஆயுதங்கள் பிறர் அன்புப் பணிபுரியும் நல்மனம் கொண்டோர் தான். எங்கோ துன்புறுவோருக்கு ஏராளமாக உதவி செய்ய முன்வரும் நாம் நம்முடன் வாழ்வோரைத் தூக்கிவிட முனைகிறோமா?

## 28.09.2024 - சனி

**மையப்பொருள்** : **இறைவார்த்தையில் நிலைத்திருப்பது: இறைச் சமூகமாக ஒன்றித்து வாழ்வது**

**சிறப்பிக்கும் குழு** : பக்த சபைகள், அன்பியப் பொறுப்பாளர்கள்

**முதல் வாசகம்** : சபை உரையாளர் 11:9-12:8

**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 90:3-4, 5-6, 12-13, 14, 17

**நற்செய்தி வாசகம்** : லூக்கா 9:43-45

**சிறப்புச் சிந்தனை** : நல்லவற்றுடன் ஒன்றிப்பவர் நாமாவோம்.

உங்கள் அன்பு கள்ளமற்றதாய் இருப்பதாக. ஒருவருக்கொருவர் உள்ளம் கனிந்த அன்பு காட்டுங்கள். இவை ஒற்றுமைக்கு வழிகாட்டும் எளிய நடைமுறைச் செயல்பாடுகள் ஆகும். அன்பு ஒன்றுதான் அகிலத்தை அரவணைத்துப் பாதுகாத்துப் பராமரிக்கும் இறைவனின் வெளி அடையாளம். ஒன்றுபட்டு வாழும்போது உறவுகளைக் கட்டியெழுப்பும் பாலங்கள் நாம் ஆகின்றோம். பிரிந்து நின்ற தருணங்களில் எல்லாம் சரிந்து சென்றோம் என்பதை உணர்ந்துள்ளோமா?



# விவிலிய ஞாயிறு
# 29.09.2024
# சிறப்புத் திருப்பலி

## மையப் பொருள்

**என் வார்த்தையில் நிலைத்திருங்கள்**
***– யோவான் 8:31***

## குறிப்புகள்

1. *தேதி மாற்றிக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளவர்கள் சுவரொட்டியில் தேதியை மாற்றிக் குறிப்பிடவும். அறிவிப்புகளிலும் சரியான தேதியைத் தெரிவிக்கவும்.*
2. *திருப்பலிக்கு முன்போ திருப்பலியில் திருக்குழும மன்றாட்டின் முடிவிலோ திருவிவிலியப் பவனி ஒன்றுக்கு ஏற்பாடு செய்வது சிறப்புச் சேர்க்கும்.*
3. *பொதுக்காலம் 26ஆம் ஞாயிறுக்குரிய திருக்குழும மன்றாட்டு, காணிக்கைமீது மன்றாட்டு, திருவிருந்துக்குப்பின் மன்றாட்டு மற்றும் வாசகங்கள் ஆகியவற்றையே பயன்படுத்துக.*

## திருப்பலி முன்னுரை

தமது வார்த்தையில் நிலைத்திருக்கத் தாகத்தோடு அழைக்கும் ஆண்டவர் இயேசுவில் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, தமிழக விவிலிய வாரப் பொன்விழா ஆண்டில் விவிலிய ஞாயிறுத் திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம். பல ஆண்டுகளாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மிக நேர்த்தியுடன் திருவிவிலிய கத்தோலிக்கப் பதிப்பு வெளிவந்திருப்பது இந்த ஆண்டு விவிலிய கொண்டாட்டங்களுக்குச் சிறப்பு சேர்க்கிறது. 'ஆளுக்கொரு விவிலியம் நாளுக்கொரு இயல்' என்ற சொலவடை இப்போது 'விடியலிலும் விவிலியமே - நாளின் முடிவிலும் விவிலியமே' என்ற பார்வையில் பரிணமித்திருப்பது பேருண்மையாகும். பல்வேறு புதிய அணுகுமுறைகளையும் செயலாக்கத்தையும் கையிலெடுத்து விவிலிய நற்பணிகளை ஆற்றும் விவிலியப் படை எல்லா இடங்களிலும் வீறுநடை போடுகிறது.

நம் ஆண்டவர் இயேசு தம் இறைவேண்டலில் முன்மொழிந்து வளர்த்த இறையாட்சியின் விழுமியங்களை நம் இல்லங்களிலும் உள்ளங்களிலும் அமைப்புகளிலும் நடைமுறைப்படுத்துவோம்.

நிச்சயமற்ற ஒன்றில் யாரும் நிலைத்திருக்க மாட்டார்கள். ஆனால் ஆண்டவரின் வார்த்தை நிச்சயமானது மட்டுமல்ல அது எப்போதும் நிலை வாழ்வின் ஊற்றாகவும் உள்ளது என்பதை உணர்ந்து, இறைவார்த்தையில் நிலைத்திருந்து பணியாளராய் தொடர இத்திருப்பலியில் அருள்வேண்டுவோம்.

## பாவத்துயர்ச் செயல் – முன்னுரை

அன்புக்குரியவர்களே, இறைவார்த்தைப் பணியில் ஈடுபாட்டைக் காட்டாமலும், இறைவார்த்தையில் நிலைத்திருக்காமலும், சரியாகக் கற்றுக்கொள்ள முயலாமலும் வாழ்ந்த நிலைக்காக மனவருந்தி மன்னிப்பு வேண்டுவோம். இறைவனின் இரக்கத்தை இறைஞ்சுவோம்.

## மனத்துயர் பல்லவி : (பாடலாம் / சொல்லலாம்)

*பதில் : மன்னியும் இறைவா மன்னியும் – எம்*
*மனத்துயர் ஏற்று மன்னியும்*

1. மனிதராக எங்கள் மத்தியில் பிறந்த கடவுளின் வார்த்தையான ஆண்டவரே, எங்களை மன்னியும்.
2. உம் வார்த்தையின் ஆற்றலால் பார்வையற்றவரின் கண்களைத் திறந்த கிறிஸ்துவே, எங்களை மன்னியும்.
3. பாவத்திலிருந்து எங்களுக்கு விடுதலை தரும் ஆண்டவரே, எங்களை மன்னியும்.

## இறைவாக்கு வழிபாடு

*திருக்குழும மன்றாட்டு முடிந்தவுடன் அனைவரும் நின்று கொண்டிருப்பர். கோவில் முகப்பிலிருந்து ஒளி, தூபம், மலர்கள் உள்ள தட்டுகள் முன்வர தொடர்ந்து திருவிவிலியம் விரித்தபடி கொண்டு வரப்படும். அப்போது : கீழ்க்கண்ட பாடலை முழுமையாகப் பாடலாம்.*

இயேசுவே உந்தன் வார்த்தையால் வாழ்வு வளம் பெறுமே
நாளுமே அன்புப் பாதையில் கால்கள் நடந்திடுமே
தேவனே உந்தன் பார்வையால் என் உள்ளம் மலர்ந்திடுமே
இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுமே

1. தீமைகள் தகர்ந்தொழிந்திடும் உன்வார்த்தை வலிமையிலே
பகைமையும் சுயநலங்களும் இங்கு வீழ்ந்து ஒழிந்திடுமே - 2
நீதியும் அன்பு நேர்மையும் பொங்கி நிறைந்திடுமே
இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுமே

2. நன்மையில் இனி நிலைபெறும் என் சொல்லும் செயல்களுமே
நம்பிடும் மக்கள் அனைவரும் ஒன்றாகும் நிலைவருமே - 2
விஞ்சிடும் புதுவிந்தைகள் உன்னைப் புகழ்ந்திடுமே
இயேசுவே என் தெய்வமே உன் வார்த்தை ஒளிர்ந்திடுமே

*(பவனி பீடத்துக்கு வந்தவுடன் கீழ்க்கண்ட பாடல்பாடி இறை வார்த்தைக்கு அஞ்சலி சமர்ப்பிக்கலாம்)*

*வார்த்தையில் நிலைத்திடும் ஆர்வத்துடன்*
*வழங்கினோம் ஒளியால் அஞ்சலி - 2*

*வார்த்தையில் நிலைத்திடும் ஆர்வத்துடன்*
*வழங்கினோம் தூபத்தால் அஞ்சலி - 2*

*வார்த்தையில் நிலைத்திடும் ஆர்வத்துடன்*
*வழங்கினோம் மலர்களால் அஞ்சலி - 2*

**முதல் வாசக முன்னுரை: எண் 11:25-29**

எப்போது எங்கே யாரால் எப்படி இறைவாக்கு உரைக்கப்பட வேண்டும் என்பதைக் கடவுள் தம் ஆவியார் வழியாக முன் குறித்து வைத்துள்ளார். அதன்படி செயல்படும் எந்த இறைவாக்கினரையும் யாராலும் தடை செய்ய இயலாது. இவ்வண்ணமே நம்மையும் தடையின்றி இறைவாக்குப் பணிபுரிய கடவுள் அழைத்துள்ளார் என்பதை உணர்ந்தவர்களாய் இன்றைய முதல் வாசகத்திற்குக் கவனமுடன் செவிசாய்ப்போம்.

**பதிலுரைப் பாடல் : திருப்பாடல் 19:7, 9, 11, 12**

***பல்லவி : ஆண்டவரின் நியமங்கள் சரியானவை;***
***இதயத்தை மகிழ்விக்கின்றன (8அ)***

**இரண்டாம் வாசக முன்னுரை: யாக்கோபு 5:1-6**

'செல்வம் செய்யாததை சேவை செய்யும்' என்பது ஆன்றோர் வாக்கு. ஆம், ஆண்டவர் செல்வத்தை, அதை வைத்திருப்பவரை வெறுப்பதில்லை. ஆனால் அச்செல்வத்தைக் கொண்டு செய்யப்படும் அநீதியை அருவருக்கிறார்.' இதை மாற்றி, நமது செல்வங்களை நன்மைக்குப் பயன்படுத்தும் மனப்பாங்குடன் இந்த இரண்டாம் வாசகத்தைக் கேட்போம்.

**அல்லேலூயா, அல்லேலூயா,**

ஆண்டவரே உமது வார்த்தையே உண்மை. உண்மையினால் எங்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மாற்கு 9:28-38**

## மறையுரைக் குறிப்புகள்

- இந்த ஆண்டு/ முன் தயாரிப்பாக நான்கு ஞாயிறுகளிலும்
    - பணிவோடு ஏற்கப்பட வேண்டிய இறைவார்த்தை (யாக் 1:21)
    - சமத்துவ வாழ்வை வலியுறுத்தும் இறைவார்த்தை (யாக் 2:1-5)
    - செயல்பாட்டுக்கு அழைக்கும் இறைவார்த்தை (யாக் 2:14-18)
    - தொண்டாற்றத் தூண்டும் இறைவார்த்தை (மாற் 9:30-37)

என்ற அருமையான மையப் பொருள்களில் நாம் திருவிவிலிய மாதத்தைக் கொண்டாடி வருகிறோம்.

- கடந்த திங்கள் முதல் நேற்றுவரை பல மையப் பொருள்களில் பல குழுக்களாகப் பணிகளைப் பிரித்துக்கொண்டு கொண்டாடினோம்.
- தூய ஆவியாரின் தூண்டுதல் இன்றி யாரும் இறைவாக்கு உரைக்க முடியாது. அவரது தூண்டுதலில் செய்யப்படும் எந்தச் செயலையும் யாராலும் தடை செய்ய முடியாது.
- எந்த இடத்தில், எப்படி இறைவாக்கு முழங்கப்பட வேண்டுமோ அப்படி நடைபெற இறைவன் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறார். அதற்கு ஒத்துழைக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.
- செல்வரைக் கடவுள் வெறுப்பதில்லை; அவர்களது இறையாட்சிக்கு எதிரான, இவ்வுலகப் போக்கிலான செயல்பாடுகளைத்தான் இறைவன் வெறுக்கிறார்.
- கொடுக்கப்படாத கூலி கூக்குரலிடும். அது எதிர்வினைகளை ஏற்படுத்தும்.
- செல்வனின் செயல்பாட்டைச் சீர்படுத்துவது இறைவார்த்தை. அது நேர்மையாளரைக் குற்றவாளி எனத் தீர்ப்பிடுவதைக் கண்டிக்கிறது.
- கிறிஸ்துவுக்கு எதிராக இல்லாத அனைவரும் அவரது பற்றாளர்கள் தான் தன் பெயரின் பொருட்டு சிறு உதவி செய்பவர் எவரும் கைம்மாறு பெறாமல் போவதில்லை என்று அவரே கூறியிருக்கிறார்.
- இறைவார்த்தைக்கு எதிராயில்லாதவர் அதனை இதயப் பற்றோடு ஏற்கிறார் என்பதே பொருள்.
- எல்லாச் சூழலையும் வெல்லக் கூடிய இறைவார்த்தையை இதயத்தில் பதிப்போம்.
- ஆண்டவருடைய வார்த்தைதான் உண்மை. அதனால் நாம் அர்ப்பணமாக்கப்பட ஆவல் கொள்வோம்.

## நம்பிக்கையாளரின் மன்றாட்டுகள்

**பதிலுரை** : *வார்த்தையில் நாங்கள் நிலைத்திடவே - உம் வரங்களைப் பொழிவீர் ஆண்டவரே*

**1. வார்த்தைவழி எமை நடத்தும் வானகத் தந்தையே!**

உம் வார்த்தையில் நிலைத்திருப்பதால் எங்களுக்கு நற்பலன்கள் பல கிடைக்கின்றன. இதனை முறையாக அனைத்துலக மக்களுக்கும் எடுத்துரைக்கும் பணிகளில் தங்களையே ஈடுபடுத்திக் கொண்டுள்ள எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவோர், பொதுநிலையினர் அனைவரும் தங்கள் சாட்சிய வாழ்வினால் உமது வார்த்தையின் வலிமையை அறிவிக்கும் கருவிகளாக விளங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**2. சமத்துவத்தில் சங்கமிக்க விழிப்புணர்வு வழங்கும் இறைவா!**

தமிழகத்தில் விவிலியப் பணி சிறக்க தமிழக ஆயர்கள் பரிந்துரைக்கும் நான்கு அம்சத் திட்டங்களான திருமணத்தின் போது திருவிவிலியத்தை மணமக்களுக்கு வழங்குதல், இல்லங்களில் திருவிவிலியத்தை அரியணையேற்றுதல், விவிலிய நூலகங்களை அமைத்தல், விவிலியக் கண்காட்சிகள் அமைத்து விளக்குதல் போன்வற்றில் தனிக்கவனம் செலுத்தி வெற்றிபெறும் விதத்தில் செயல்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. பலமுறை, பலவழிகளில், பலர்வழியாகப் பேசிடும் இறைவா!**

எங்களைப் பக்குவப்படுத்தி, விவிலியப் பணியாளர்களாக உருமாற்றும் நீர், உமது வார்த்தையில் நிலைத்திருப்பதின் அவசியத்தை எங்களுக்கு உணர்த்தி எம் இல்லம், குழுமம், சமுதாயம் அனைத்தும் உம் வார்த்தைகளில் நிலைத்திருக்கும் விதத்தில் நாங்கள் பணிபுரிய அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**4. ஒளியும் வழியுமான உன்னத இறைவா!**

உமது வார்த்தையில் நிலைத்திருப்பதை வெளிப்படுத்தும் பல்வேறு செயல்பாடுகளில் நாங்கள் வெற்றி காணவும் இதே வெற்றிக்கான பாதையில் பிறரை ஒளியுடன் வழிநடத்தவும் எங்கள் சிறார்கள், இளையோர், முதிர்நிலையினர், முதியோர் ஆகிய அனைவரும் உமது வார்த்தையில் நிலைத்து, அதன் ஒளியில் பயணிக்கவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**5. உடனிருந்து காக்கும் ஒப்பற்ற இறைவா!**

இறைவார்த்தைப் பணியில் நாங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ள எடுத்திருக்கும் திட்டங்களுக்கு நீர் ஆசியளிக்கவும் பல

வடிவங்களில் நாங்கள் சிறப்பிக்க விழையும் செயல்பாடுகள் வெற்றி கரமாக அமைந்து சிறந்த பலனைத் தரவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

### காணிக்கைப் பவனி

- திருவிவிலியப் பிரதிகள்
- திருவிவிலியப் பணிகளைச் சிறப்பிக்க அன்பளிப்பு பணஉதவி உறைகள் (covers)
- கோவிலுக்கும் பங்குப் பணிகளுக்கும் உதவும் பொருள்கள்
- விவிலிய விளக்கச் சிற்றேடுகள்
- இல்லங்களில் வைக்கத் தகுந்த இறைவார்த்தை அட்டைகள் போன்றவற்றை வரிசையாகக் கொண்டு வந்து அருள்பணி யாளரிடம் வழங்கலாம் (வார்த்தைகளோ, விண்ணப்பங்களோ தேவையில்லை. அப்போது வழக்கமாக முழங்கப்படும் காணிக்கைப் பாடல் ஒன்று இசைக்கலாம்).

### திருவிருந்துக்குப் பின்

- கடந்த ஒரு மாத காலமாக விவிலிய விழாவுக்காகப் பணியாற்றியவர்களுக்காக நன்றி கூறலாம்.
- விவிலிய ஞாயிறுக்கான சிறப்பு நிகழ்வுகளை அறிவிக்கலாம்.

### சிறப்பு ஆசிகள்

பீடத்தின் முன் ஒருவர் திருவிவிலியத்தை விரித்து உயர்த்தி மக்கள் பார்க்கும்படி நிற்பார். அப்போது (ஒருவர் சொல்லச் சொல்ல திரும்பச் சொல்லலாம் அல்லது முன்னதாகவே வழங்கப்பட்டுள்ள துண்டுச் சீட்டிலிருந்து எல்லாரும் சேர்ந்து வாசிக்கலாம்). அன்பு ஆண்டவரே / உம் வார்த்தையில் நிலைத்திருப்பதற்காக / என்னை அழைத்திருக்கும் உம்மைப் / போற்றிப் புகழ்கின்றேன். / என் காலடிக்கு விளக்கும் / என் பாதைக்கு ஒளியுமான / உம் வாக்கை / (திபா 109:105), உயிருள்ளதும் / ஆற்றல் வாய்ந்ததுமான / இறைவார்த்தையை / (எபி 4:12), கற்பிப்பதற்கும் / கண்டிப்பதற்கும் / சீராக்கு வதற்கும் / நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் / பயனுள்ளதான (2 திமொ 3:16) இறைவார்த்தையை / என் இதயத்தில் நிலைநிறுத்துவேன், / அதன் ஆற்றலை உணர்ந்து வாழ்ந்து / நான் அளப்பரிய நலன்கள் புரிவேன் / என்று வாக்களிக்கிறேன். / (திருவிவிலியத்தை நோக்கி கைகளை நீட்டி கண்களில் ஒற்றிக்கொள்ளலாம்).

**அன்னை மரியா பாடல் :**
**விடியலிலும் விவிலியமே – நாளின் முடிவிலும் விவிலியமே**



# விவிலிய ஆராதனை (முதல் வெள்ளி / விவிலிய வாரத்தின் வெள்ளி)

இறைமக்கள் ஒன்றுகூடி ஒரு பாடலைப் பாட, அருள்பணியாளர் நற்கருணைப் பேழையிலிருந்து நற்கருணையைக் கொண்டு வந்து பீடத்தில் வைத்து தூபமிட்டபின் மன்றாடுகிறார்.

அருள்பணி. : ஆண்டவரே, உம்மைப் போற்றுகின்றோம், புகழ்கின்றோம், நற்கருணையில் வீற்றிருக்கின்ற உமது உண்மையான உடனிருப்பை நாங்கள் சிந்தித்து உமக்கு நன்றி கூறுகின்றோம். இயேசுவே! உம்மையும் உம் வார்த்தையையும் நம்புகிறோம். இந்த நேரத்தில் நீர் எங்களுக்கு வழங்கும் அருளைப் பெற எங்கள் மனத்தையும் உள்ளத்தையும் தயார்படுத்துகின்றோம். நாங்கள் உமக்கும் உமது எல்லையற்ற அன்பிற்கும் முன்பாக இருக்கின்றோம் என்கின்ற விழிப்புணர்வை எங்களுக்குத் தாரும். உமது வார்த்தையை உள்வாங்கி வாழ்வாக்க எங்கள் மனக் கண்களைத் திறந்தருளும்.

அருள்பணி. : எல்லாப் புகழும் நன்றிகளும் என்றென்றும் உமதே!

எல் : மிகவும் தூய, அருள் ஆற்றல் நிறைந்த நற்கருணை ஆண்டவரே!

"வாக்கு மனிதர் ஆனார்; எம்மிடையே குடிகொண்டீர். உமது மாட்சியை நாங்கள் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய நீர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தீர்.

- விண்ணுலகில் இருக்கிற...
- அருள்நிறைந்த மரியே...
- தந்தை, மகன்...

அருள்பணி. : எல்லாப் புகழும் நன்றிகளும் என்றென்றும் உமதே!

எல் : மிகவும் தூய, அருள் ஆற்றல் நிறைந்த நற்கருணை ஆண்டவரே!

எம்மாவு சீடர்கள், ஒருவரையொருவர் நோக்கி, "வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" என்று பேசிக் கொண்டார்கள் (லூக் 24:32).

- விண்ணுலகில் இருக்கிற...
- அருள்நிறைந்த மரியே...
- தந்தை, மகன்...

அருள்பணி. : எல்லாப் புகழும் நன்றிகளும் என்றென்றும் உமதே!

எல் : மிகவும் தூய, அருள் ஆற்றல் நிறைந்த நற்கருணை ஆண்டவரே!

நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" என்று கூறினீர் (மத் 28:19-20).

- விண்ணுலகில் இருக்கிற...

- அருள்நிறைந்த மரியே...

- தந்தை, மகன்...

அருள்பணி. : எல்லாப் புகழும் நன்றிகளும் என்றென்றும் உமதே!

எல் : மிகவும், தூய, அருள் ஆற்றல் நிறைந்த நற்கருணை ஆண்டவரே!

**இறைவார்த்தையில் தாகம் நிறைந்த அன்பர்களே,**

இப்பொழுது நாம் அனைவரும் கடவுளின் வார்த்தைக்குச் செவிமடுப்போம். எப்பொழுதும் உயிருள்ள ஆற்றல் அளிக்கும் இறைவார்த்தை நம் வாழ்வோடு கலந்து நம் அறிவுக் கண்களைத் திறக்கட்டும்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி**

அல்லேலூயா அல்லேலூயா (யோவா 15:4அ, 5ஆ)

"நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்... ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்"

**அல்லேலூயா, அல்லேலூயா**

மாற்கு 8:27-35

## சிந்தனைத் துளிகள்

## இயேசு கிறிஸ்துவை குறித்த புரிதல்கள்

மாற்கு நற்செய்தியாளர் நற்செய்தியை இரண்டாகப் பிரிக்கிறார். இயேசுவின் கலிலேயப் பணி, இயேசுவின் எருசலேம் பணி. முதல் எட்டு அதிகாரங்களில் இயேசுவின் கலிலேயப் பணி நிறைவடைகிறது. அதனால் இயேசு தம்மைப் பற்றிய புரிதல் என்ன என்று கேட்கிறார். சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் (மத் 14:1-2), எலியா எனவும் (மலா 4:5),

இறைவாக்கினர் எனவும் கூறினர். இத்தகைய புரிதலை இயேசு தம் கலிலேயப் பணியின்போது, தான் செய்த செயல்கள் வழியாக தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்பினார். அவர் செய்த அற்புதங்கள், புதுமைகள் அவரை இறைவாக்கினராக அறிமுகப்படுத்தின.

### பேதுருவின் மெசியா அறிக்கை

இயேசுவைக் குறித்த மக்களின் புரிதல் பலவாக இருந்தது. ஆனால் பேதுருவின் மெசியா அறிக்கைதான் மாற்கு நற்செய்தியின் ஒட்டுமொத்த செய்தியாகும். ஒத்தமை நற்செய்திகள் மூன்றிலும் பேதுருவின் மெசியா அறிக்கை இடம் பெற்றுள்ளது. மெசியாவின் வருகைக்காக இஸ்ரயேல் மக்கள் பல நூறு ஆண்டுகள் காத்திருந்தனர்.

### மெசியா என்றால்...

மெசியா என்பது எபிரேய வார்த்தை; கிறிஸ்து என்பது கிரேக்கச் சொல். இரண்டிற்கும் ஒரே பொருள்தான். அதாவது, அருள்பொழிவுப் பெற்றவர் அல்லது கடவுள் தேர்ந்தெடுத்த தலைவர் என்பது பொருள் (மத் 1:16). இந்த மெசியா தாவீதின் தளிர். இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலை மற்றும் வெற்றியைத் தர வல்லவர் என நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்தனர். இத்தகைய சூழலில் பேதுரு 'நீர் மெசியா' என கூறினார். பேதுருவின் மெசியா அறிக்கை பிலிப்பு செசரியாப் பகுதியில் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஆகவே இயேசு மெசியா என்கிற அறிக்கை பிற இனத்து மக்களிடையே நடந்துள்ளது ஒரு சிறப்பான செய்தியாகும். எனவே, சாதாரண சிற்றூர்கள், படிப்பறிவு இல்லாதவர்கள் மத்தியில் இயேசு மெசியா என அடையாளம் காட்டப்பட்டுள்ளது சிறப்பு.

### தடைகளைத் தகர்த்து இயேசுவை அறிக்கையிடுவோம்

மெசியா அறிக்கைக்கு பின் இயேசு தன்னை மானிட மகன் என அறிமுகப்படுத்துகிறார். அதாவது பாடுகள் வழியாகவே மீட்பு என்கிறார். இயேசுவின் வல்ல செயல்களைக் கண்ட பேதுரு அவரை மெசியா என்றார். இயேசுவின் பாடுகளைக் கேட்டவுடன் வேண்டாம் என்கிறார். நம் வாழ்வில் சுமையில்லாதது ஏதும் இல்லை. துன்பம் இல்லாமல் இன்பம் இல்லை. "வெள்ளியைப் போலல்ல; துன்பம் எனும் உலை வழியாக உன்னைத் தேர்ந்தெடுத்தேன் (எசா 48:10)." தடைகள் உடைத்து வெற்றி பெறுவோம்.

### தனிப்பட்ட மன்றாட்டு

"நானே திராட்சைச் செடி; நீங்கள் அதன் கொடிகள் ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது." (தனிப்பட்ட வேண்டலில் மக்களை ஊக்குவிக்க இதுபோன்ற

இறைவார்த்தைப் பிரதிகளைக் கொடுக்கலாம். சிறு அமைதிக்குப் பிறகு பொருத்தமான பாடல் பாடலாம் (யோவா 15:5).

பாடல் : அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே...

குழு : மன்றாட்டு

வழிநடத்துபவர் : பெத்லகேமில் இடையர்களும் ஞானிகளும் உம்மைக் கண்டுணர்ந்து சிந்தித்ததுபோல

பதில் : எங்கள் வாழ்வில் உம்மைக் கண்டறிய வேண்டும் ஆண்டவரே (மத் 2:11)

வழிநடத்துபவர் : தாபோர் மலையில் நீர் உமது மாட்சியை உம் சீடர்களுக்கு வெளிப்படுத்தியதுபோல...

பதில் : ஒவ்வொரு நாளும் உமது மாட்சியை எங்களுக்கு வெளிப்படுத்தும் ஆண்டவரே... (மத் 17:16)

வழிநடத்துபவர் : உமது சீடர்களை ஏரிக்கரைக்கு அழைத்தவரே...

பதில் : எங்களையும் உமது பணிக்கு அழைத்தருளும் ஆண்டவரே... (மத் 4:18-22)

வழிநடத்துபவர் : சக்கேயுவின் தீவிர (பெரு) முயற்சி மற்றும் மனமாற்றத்தை நீர் கண்டீர்.

பதில் : எங்கள் முயற்சிகளை உம் பாதம் சமர்ப்பிக்கிறோம் ஆண்டவரே... (லூக் 19:1f).

வழிநடத்துபவர் : காது கேளாதவர்களைத் தொட்டு உமது நெருக்கத்தை காட்டினீர் ஆண்டவரே...

பதில் : எங்களையும் உம் வார்த்தையால் தொட்டு, நாங்கள் உம் வழியில் நடக்க அருள்தாரும் ஆண்டவரே (மாற் 7:33).

வழிநடத்துபவர் : மத்தேயுவின் பழைய வாழ்க்கையை மாற்றி, உம் திருத்தூதராக மாற்றினீர் ஆண்டவரே...

பதில் : என் வாழ்க்கையையும் அர்த்தமுள்ளதாக்கும் ஆண்டவரே (மத் 9:9-13).

வழிநடத்துபவர் : இறந்த இலாசரை மீண்டும் உயிரோடு எழுப்பிய ஆண்டவரே...

பதில் : எம்மில் மடிந்துபோன நம்பிக்கை, ஆர்வம், விருப்பம் ஆகியவற்றைப் புதுப்பித்து ஊக்குவியும் ஆண்டவரே (யோவா 11:1f).

வழிநடத்துபவர் : எம்மாவு சீடர்களுக்கு மறைநூலை விளக்கி அவர்களது உள்ளத்தைப் பற்றி எரியச் செய்த ஆண்டவரே...

பதில் : உமது வார்த்தையின்மீது அன்பையும், உமது உயிருள்ள உடனிருப்பின்மீது நம்பிக்கையையும் ஏற்படுத்தும் ஆண்டவரே (லூக் 24:13).

பாடல் : இயேசுவே உந்தன் வார்த்தையால் வாழ்வு வளம் பெறுமே

**விண்ணுலகில் இருக்கிற**

வழிநடத்துபவர் : ஆண்டவரே, நீர் எப்போதும் எங்கள் அருகில் இருப்பதால், குறிப்பாக வார்த்தை வடிவிலும், அப்ப வடிவில் நற்கருணையிலும் இருப்பதால் நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். எல்லா நேரத்திலும் வார்த்தையாகிய உம்மை நோக்கி நம்பிக்கையுடனும் எளிமையுடனும் உம்மை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளவும், அன்றாட வாழ்வில் உமது வார்த்தையை வாழவும், தைரியத்துடன் உம்மை அறிவிக்கவும் விரும்புகிறோம். அதற்கான அருளைத் தந்தருளும். ஆமென்.

**நற்கருணை ஆசி**

*இறுதியில் புனித மரியன்னைப் பாடல் (என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றிடுதே) பாடலாம்.*



# என் வார்த்தையைக் கடைப்பிடிப்பவரே என் சீடர் (யோவான் 8:31) (அருள்வாக்கு வாசிப்பு மாதிரிப் பாடம்)

(அருள்வாக்கு வாசிப்பை குடும்ப, சிறு குழும சூழலில் [அன்பியம்] நிகழ்த்துவது மிகுந்த பலனளிக்கும்).

நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரான இயேசு வாழ்வதால் நாமும் வாழ்கிறோம் (காண். யோவா 14:19இ) எனும் நிகழ்காலத்திற்கான வாழ்வியல் மதிப்பீடுகளை, இறைவெளிப்பாட்டினை திருவிவிலியம் தன்னகத்தே தாங்கி நமக்குத் தருவது மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. உயிருள்ளதும் வாழ்வளிப்பதுமான இறைவார்த்தையை வாசிப்போர் வாழ்வை, நிலைவாழ்வைப் பரிசாகப் பெறுகிறார்கள், உலகிற்கு ஒளியாக, உப்பாகத் திகழ்கிறார்கள். எனவே இயேசுவை அறிபவர்கள் அவரது அனுபவத்தால் ஆற்றலும் ஆளுமையும் பெறுகிறார்கள். ஆகவே இயேசுவைக் குறித்த வெளிப்பாடுகள், ஒவ்வொருவருடைய வளர்ச்சிக்கு, ஆற்றலுக்கு, ஆளுமைக்கு உதவுவதால் அருள்வாக்கு வாசிப்புப் பாணியில் இயேசுவின் செய்திகளை தியானிப்போம்.

## விவிலியப் பகுதி

யோவான் 8:28-32 இயேசுவின் அடிப்படை விழுமியங்களில் வெளிப்படும் பெண்ணுரிமை மற்றும் விடுதலை, குற்றங்களைப் பற்றிய தெளிவான பார்வை (8:1-11), இயேசுவின் வழியில் காணும் ஒளிமயமான எதிர்காலம், ஏழைகளின் சார்புக்குரல், தந்தையாகிய கடவுளை இயேசுவில் காண அழைக்கும் பாங்கு (8:12-30) போன்றவை பின்புறச் செய்திகளாக உள்ளன. இந்நிலையில் 8:28-32 வசனங்களில் இயேசுவின் இறை-மனித உறவின் மதிப்பீடுகளை அருள்வாக்கு வாசிப்பு முறையில் தியானிக்கிறோம்.

### 1. வாசித்தல்

இறை ஏவுதலால் பெற்றுள்ள விவிலியத்தை இறை உணர்வோடு எடுத்து தூய ஆவியாரின் துணையை நாடிய பின் செப உணர்வோடு வாசிக்கிறோம். 8:28-32 வரை உள்ள இறை வசனங்களில் இயேசுவே நேரிடையாகப் பேசும் வசனங்கள் (வ. 28-29, 31ஆ-32) மற்றும் நற்செய்தியாளரின் விளக்கச் செய்தியும் (வச - 30) இணைந்தே உள்ளன. இயேசுவின் உரையாடலில் மக்கள் மற்றும் யூதர்கள் பங்கேற்றாலும் இயேசுவே தன்னைப் பற்றிய வெளிப்பாட்டினைத் தருகிறார். இப்பகுதியின் பொருளை உணர்ந்து கொள்ள கீழ்க்கண்ட வினாக்கள் பேருதவியாக இருக்கும்.

- இப்பகுதியில் பங்குபெறுவோர் யார்?
  இயேசு, யூதர்கள் மற்றும் மக்கள்
- இயேசு யாரைப் பற்றி, எதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்?
  இயேசுவின் சிலுவை மரணம், தந்தையாகிய கடவுள்.
- மானிட மகனை உயர்த்துபவர்கள் யார்? யார்?
  நீங்கள் (யூதர்கள், மக்கள்)
- இயேசுவை அனுப்பியவர், கற்றுத் தருபவர், துணையாய் இருப்பவர் யார்?
  தந்தையாகிய கடவுள்
- தந்தையாகிய கடவுளுக்கு உகந்தவற்றைச் செய்பவர் யார்?
  இயேசு
- இயேசுவின் வார்த்தைகளை நம்பிக் கடைபிடிப்போர் யார்?
  இயேசுவின் சீடர்கள்
- உண்மையை அறியக் கூடியவர்கள் யார்?
  இயேசுவின் சீடர்கள்
- உண்மையால் விடுதலை பெறுபவர்கள் யார்?
  இயேசுவின் சீடர்கள் / இயேசுவின்மீது நம்பிக்கைக் கொள்பவர்கள்

**2. தியானித்தல்**

வாசிக்கப்பட்ட இறைவார்த்தைப் பகுதியிலிருந்து மனத்திற்குப் பிடித்த விவிலிய வார்த்தைகள் (அல்லது) வார்த்தைகளின் தொகுப்பு (அல்லது) வசனத்தை நினைவுகூர்தல் இதன் முதல் நிலையாகும். மனத்திற்கு பிடித்தவற்றினின்று ஒன்றை மட்டும் தேர்ந்து கொண்டு அதனோடு உரையாடல் மேற்கொள்ளுதல் அதன் அடுத்த நிலையாகும். இரையை தின்ற மாடு மீண்டும் அதனை அசைபோடுவது போல் தேர்ந்து கொண்ட வசனத்திற்கும் தனக்குமான தொடர்புடைய தனிப்பட்ட, குழும மற்றும் சமூகம் சார்ந்த கேள்விகளை எழுப்புதல் இதன் தொடர்பை அதிகப்படுத்தும்.

- “இருக்கிறவர் நானே”
- “மானிட மகன்”
- “நானாக எதையும் செய்வதில்லை”
- “என்னை அனுப்பியவர் என்னோடு இருக்கிறார்”
- “என் வார்த்தையைக் கடைபிடிப்போரே என் சீடர்”
- “உண்மையை அறிந்தவர்களாய் இருப்பீர்கள்”
- “உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்”

எனும் வார்த்தைகள் (அல்லது) வார்த்தைகளின் தொகுப்பு மற்றும் வசனங்களிலிருந்து ஒன்றை மட்டும் தேர்ந்துகொள்ளுதலாகும். “என் வார்த்தையைக் கடைப்பிடிப்போரே என் சீடர்” எனும் வசனத்திலிருந்து ஒரு சில கேள்விகளைக் கேட்டுத் தியானிக்கலாம்.

- இயேசுவின் எந்த வார்த்தையைக் கடைபிடிக்க வேண்டும்?
- இயேசுவின் சீடர் என்றால் என்ன?
- இயேசுவும் உண்மையும் ஒன்றா?
- இயேசு அளிக்கும் விடுதலை யாது?

மேற்கூறப்பட்டுள்ள ஒரு சில கேள்விகள்போன்று மனத்தில் எழும் கேள்விகளை ஒருமுகப்படுத்துதல் இந்நிலையின் இறுதிக் கூட்டமாகும். இதுவரை அல்லது இந்நாள்களில் கடைப்பிடித்துள்ள இயேசுவின் வார்த்தையை நினைவுப்படுத்திக் கொள்ளுதல் நல்லதாகும்.

### 3. இறைவேண்டல்

இறைவார்த்தைப் பின்புலத்தில், இறைவார்த்தை எழுச்சியில் உரையாடுதலே இறைவேண்டலாகும். இது நமது சிறிய இதயம் பெரிய இதயத்தோடு இணைந்திட முயற்சித்தலாகும். வரையறுக்கப்பட்ட அல்லது ஏற்கெனவே தெரிந்துள்ள மனப்பாட மன்றாட்டுகளைச் சொல்லாமல் உணர்வோடு கூடிய உள்ளத்திலிருந்து எழும் எண்ணங்களை, உணர்வுகளை ஒப்புக்கொடுத்தலாகும். இதில் ஒரு சில வார்த்தைகளோ, ஏக்கப் பெருமூச்சுகளோகூட செபங்களாக அமையலாம்.

### 4. ஆழ்நிலைத் தியானம்

இறைவனோடு கொண்டுள்ள இறைவேண்டலின் நீட்சியே ஆழ்நிலைத் தியானமாகும். நமது சிறிய இதயம் பெரிய இதயமான ஆண்டவரில் ஆனந்தடைவது, தாய்மடி தவழும் குழந்தையைப் போல் ஆறுதலும் அமைதியும் கொள்வது, இறைவார்த்தையோடும் இறைவனோடும் ஐக்கியமாகி அந்நிலையிலேயே ஒன்றித்து விடுதலாகும். இது ஒரு பரவசநிலை மற்றும் கடவுள் அனுபவமாகும். இங்கு கடவுளின் திருவுளத்தை உணரவும் வாழ்வுக்கான செயல் பாடுகளைத் தேர்ந்து தெளியவும் முயல வேண்டும். நேர்மறையான எண்ணத்தோடு புதுப்பித்துக்கொள்ள, புத்துணர்ச்சிபெற, புத்தாக்கம்பெற விருப்பம் கொள்ள வேண்டும்.

### 5. செயல்படுதல்

‘இயேசு’ அனுபவம் என்பது செயல்பாட்டுக்கான அனுபவமாகும். “செயல்களில்லாத நம்பிக்கையும் செத்ததே” (யாக் 2:26ஆ) என்பது போல நம்பிக்கை அனுபவத்தைச் செயலாக்கம் செய்ய முயல வேண்டும். இயேசுவின் தோற்ற மாற்ற நிகழ்வில் பேதுரு கூறியது போல “ரபி, நாம் இங்கேயே இருப்பது நல்லது” (மாற் 9:5அ) என இருந்து விடலாகாது. மலையிலிருந்து இறங்கி மக்களைச் சந்தித்ததுபோல இறைவார்த்தை அனுபவத்தால் உந்தித் தள்ளப்பட்டவர்களாய் குறுகிய மற்றும் நீண்ட காலத்திற்கான செயல்பாட்டுத் திட்டங்களை வகுத்துச் செயல்பட வேண்டும். செயல்படுதல் எனும் நிலையானது நேர்மறையான எண்ணத்தையே உருவாக்க வேண்டும். எதிர்மறையான எண்ணங்

களிலிருந்து, குற்ற உணர்ச்சிகளிலிருந்து விடுவிப்பதாக அமைய வேண்டும். “என் வார்த்தையைக் கடைப்பிடிப்போரே என் சீடர்” - ஆம் நான் இயேசுவின் சீடர்தான். அவரது வார்த்தையை என்றும் கடைபிடிப்பவன்தான். கடைப்பிடிப்பேன் எனும் உறுதியெடுத்தல் அவசியம்.

**செயல்பாட்டுக்கான பரிந்துரைகள்**

- ஒவ்வொரு நாளும் விவிலியத்தின் ஒரு சிறிய பகுதியை, வாசித்து அருள்வாக்கு முறையை அணுகுவேன்.
- விவிலியப் பகுதியை வாசிக்க முடியாத சூழலில் ஏற்கெனவே அறிந்திருக்கும் பகுதியை நினைவில் நிறுத்தி அருள்வாக்கு முறையை முயற்சிப்பேன்.

**இறைவார்த்தையில் நிலைத்திருக்க**

**இவையும் வழிமுறைகளே...**

✶ பயணத்தின் பொழுது திருவிவிலியத்தை (Pocket Size) அல்லது புதிய ஏற்பாட்டை உடன் கொண்டு சென்று வாசிப்பது.

✶ அலைபேசியில் திருவிவிலியத்தைப் பதிவிறக்கம் செய்து நேரம் கிடைக்கும்போது வாசிப்பது / கேட்பது.

✶ இரண்டாம் வத்திக்கான் சங்க கொள்கைத் திரட்டுகளில் **இறைவெளிப்பாட்**டை (Dei Verbum) வாசித்துப் புரிந்து கொள்வது.

✶ திருவிவிலிய வசனங்கள் உள்ள அட்டைகளை வீட்டில் வைத்து அணி செய்வது.

✶ திருவிவிலியச் செபமாலையை தினந்தோறும் வேண்டுவது.

✶ திருவிவிலியக் கண்காட்சிகள் அமைக்க உதவுவது, அவற்றைப் பார்வையிடுவது.

✶ அலைபேசியில் சாதா நிலையில் பேசும் போது இறை வார்த்தைகளைப் பயன்படுத்துவது.

# திருவிவிலியத்தை அரியணையேற்றம் செய்தல்



**குறிப்புகள்**

- திருவிவிலிய அரியணையேற்றம் செய்ய ஒரு நிலையான இடத்தைத் தேர்வு செய்தல் அவசியம்.
- இதனை ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டும்.
- நாள், நேரம் ஆகியவற்றைத் தீர்மானித்தபின் மற்றவர்களுக்கு முறையாக அறிவிப்புக் கொடுத்து அழைத்தல்.
- வந்திருப்போர் சிறப்பான முறையில் பங்கேற்க உதவியாக நிகழ்வுகள் பற்றிய சிற்றேடு ஒன்று தயாரித்தல் (நன்று).
- அரியணையேற்றி வைக்கப்பட்டுள்ள திருவிவிலியத்திலிருந்து ஒவ்வொரு நாளும் வாசித்தல் அவசியம்.
- விவிலிய அஞ்சலிக்கான ஒளி, தூபம், மலர்கள் அடங்கிய தட்டுகளைத் தயாராக வைத்தல்.
- அரியணையேற்றம் செய்யும்போது திருவிவிலியத்திற்கு அணிவிக்க ஒரு மலர் மாலை வைத்திருத்தல்.
- பவனியில் கொண்டுவர திருவிவிலியம் ஒன்று தயார் நிலையில் வைத்திருத்தல்.

**முன்னுரை**

இறைவார்த்தை வழியில் வாழ பேராவல் கொண்டுள்ள சகோதர சகோதரிகளே, “இதோ நாள்கள் வருகின்றன! அப்போது நாட்டினுள் பஞ்சத்தை அனுப்புவேன். அது உணவு கிடைக்காத பஞ்சமோ, நீரில்லாத வறட்சியோ அன்று; ஆண்டவரின் வாக்குக் கிடைக்காத பஞ்சமே” (ஆமோ 8:11) என்று இறைவாக்கினர் ஆமோஸ் கூறியுள்ளார். ஆண்டவரின் வாக்கு எல்லாருக்கும் எப்போதும் கிடைக்கும் வண்ணம் செய்யப்படும் மிகச் சிறந்த தயாரிப்புதான் திருவிவிலியத்தை இல்லத்தில், ஆலயத்தில், நிறுவனத்தில் அரியணை ஏற்றி வைப்பது, இந்த நிகழ்வில் பங்குபெறப் பெருமகிழ்வுடன் வந்திருக்கும் உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். இந்நிகழ்வில் இனிதே பங்கேற்று, இறைவார்த்தையின் ஆர்வலர்களாக வாழ நம் அனைவருக்கும் இறையருள் துணை நிற்பதாக; இதோ இப்போது திருவிவிலியப் பவனி தொடங்குகிறது. அனைவரும் எழுந்து நின்று ஆர்வத்துடன் பங்கேற்போம்.

*(ஒளி, தூபம், மலர்கள் தட்டுகளைத் தாங்கியிருப்போர். வரிசையாக நிற்கின்றனர். தொடர்ந்து திருவிவிலியம் திறந்த நிலையில், உயர்த்திக் கொண்டு வரப்படுகிறது)*

**பாடல் / பல்லவி :** ஆற்றலோடு வாருமே (பாடலாம்)

- அருள் வழங்கும் வார்த்தையே - 2
- ஆக்கம் தரும் வார்த்தையே - 2
- இருள் களையும் வார்த்தையே - 2
- ஈந்து காக்கும் வார்த்தையே - 2
- உறவை வளர்க்கும் வார்த்தையே - 2
- ஊக்கம் தரும் வார்த்தையே - 2
- எங்கும் நிறைந்த வார்த்தையே - 2
- ஏக்கம் போக்கும் வார்த்தையே - 2
- ஐயம் களையும் வார்த்தையே - 2
- ஒன்று சேர்க்கும் வார்த்தையே - 2

*(பவனியின் முடிவில், திருவிவிலியம் அதற்காக அலங்கரிக்கப்பட்டுள்ள நிலையான இடத்தில் வைக்கப்படும். எல்லாரும் கைதட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர். இல்லத் (நிறுவனத்) தலைவர் மலர் மாலை அணிவித்து மரியாதை செய்வார். பின்னர் ஒளி, தூபம், மலர்களால் அஞ்சலி எடுக்கப்படும்). அப்போது அஞ்சலிப் பாடல் பாடப்படும்.*

*வார்த்தை வழி வாழவந்த வழிபாட்டு நாயகர்க்கு*
*ஒளியை ஏற்றி வாழ்த்துரைப்போமே – நாம்*
*ஒளியை ஏற்றி வாழ்த்துரைப்போமே*

*வார்த்தை வழி வாழவந்த வழிபாட்டு நாயகர்க்கு*
*தூபம் காட்டி வாழ்த்துரைப்போமே – நாம்*
*தூபம் காட்டி வாழ்த்துரைப்போமே*

*வார்த்தை வழி வாழவந்த வழிபாட்டு நாயகர்க்கு*
*மலர்கள் சாற்றி வாழ்த்துரைப்போமே – நாம்*
*மலர்கள் சாற்றி வாழ்த்துரைப்போமே*

*(எல்லாரும் திருவிவிலியத்தின் பக்கம் கைகளை நீட்டி தங்கள் நெற்றி மற்றும் கண்களில் வைத்துக்கொண்டு)*

ஆண்டவரே பேசும் நாங்கள் கேட்கிறோம் (என்று சொல்வர்)

**முதல் வாசக முன்னுரை : எசா 40:5-11**

(உரோ 10:8-17; நெகே 8:1-8; இச 6:4-9, 20-25; எசா 55:1-11; திப 8:26-31; 1 கொரி 2:1, 10-13; 2 திமொ 3:14-17; எபி 4:12; 1 பேது 1:23-25; 2 பேது 1:17-21 இப்பகுதிகளுள் ஏதேனும் ஒன்றை முதல் வாசகமாகப் பயன்படுத்தலாம் அதற்கேற்ற முன்னுரையை வழங்கலாம்).

மானிடர் புல்லையும் வயல் வெளிப் பூவையும் போன்றவர் ஆனால் ஆண்டவரின் வாக்கோ என்றென்றும் நிலைத்திருப்பது. அது தன்னை விரும்பி ஏற்கும் அனைவருக்கும் வெற்றிப் பரிசை அளிக்கவல்லது என்ற சிந்தனையோடு வாசகத்திற்குச் செவிசாய்ப்போம்.

**பதிலுரைப் பாடல் : திபா 103:1-2; 3, 5; 6, 8; 21-22**

***பல்லவி :*** *என் நெஞ்சே ஆண்டவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே*

***அல்லது :*** *யாரிடம் செல்வோம் இறைவா - பாடல்*

**நற்செய்தி வாசகம்: யோவா 6:59-61**

*(தேவைக்கேற்ப யோவா 1:1-14; லூக் 10:38-42, 12:22-33, 15:1-7, 19:1-10, 24:13-35. மத் 4:1-11; 13:4-9, 18-23 இவற்றுள் ஒரு பகுதியையும் தேர்ந்துகொள்ளலாம்)*

ஆவியையும் வாழ்வையும் கொடுக்கின்ற வார்த்தைகளுக்கு உரிமையாளர் நம் ஆண்டவர் இயேசு. அவரது வார்த்தை நம் இல்லத்தில், நம் மத்தியில் குடியிருப்பது பெருமைக்குரியது. இதனை என்றென்றும் வாசித்து வாழ்வாக்கும் இனிய மனத்துடன் இவ்வாசகத்தைக் கேட்போம்.

**மறையுரைக் குறிப்புகள்**

*(இது இந்நிகழ்வில் பங்கேற்போரை விவிலிய ஆர்வலர்களாக மாற்றும் இனிய வாய்ப்பு. எனவே நேரத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப மறையுரையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்).*

**சிறப்பாக**

தமிழக விவிலியப் பணிக்குழு, மறைமாவட்ட விவிலியப் பணிக்குழு மேற்கொள்ளும் விவிலியப் பணிகளை விரித்துரைக்கலாம்.

**குறிப்பாக**

கோடை விடுமுறை விவிலியப் பள்ளி, விவிலியக் கருத்தரங்கு, இணையவழி விவிலியக் கருத்தரங்குகள், அஞ்சல்வழி விவிலியக் கல்வி, வாசகர் மன்றங்களில் பங்கேற்பு போன்றவை பற்றி இறைவார்த்தையை நம்பி ஏற்று வாழ்ந்தவர்கள் பெற்ற நலவாழ்வு பற்றிய அனுபவங்கள்.

- இரவு வேண்டலில் (குடும்ப செபத்தில்) இறைவாக்கைப் பயன்படுத்தும் முறை
- Lecio Divina - இறைவார்த்தை வாசிப்பு முறைகள் பற்றி விரித்துரைக்கலாம்.
- விவிலிய வழிபாடுகள் நடக்கும் போதும், முன்னின்று நடத்தும் போதும் ஏற்படும் நலன்கள்
- விவிலிய மாத நிகழ்வுகளில் - போட்டிகளில் - கொண்டாட்டங்களில் பங்கேற்கத் தூண்டலாம்.

- விவிலியக் கட்டுரைப் போட்டிகளில் பங்கேற்றல்.
- இல்லத்தில் அருள்வாக்கு; என்றென்றும் செல்வாக்கு.
- இல்லங்களில் - நிறுவனங்களில் திருவிவிலிய அரியணையேற்றம் தமிழக ஆயர் பேரவையின் நான்கு அம்சத் திட்டங்களுள் ஒன்று.

(*தேர்வு செய்யப்படும் இறைவார்த்தைப் பகுதிகளுக்கு உரிய குறு விளக்கத்தை அளித்துவிட்டு பகிர்தல் முறையில் பங்கேற்பாளர்கள் தங்கள் இறைவார்த்தை விளக்கக் கருத்துகளைச் சொல்ல வாய்ப்பளிக்கலாம்*).

**பொருத்தமான பாடல்**

வார்த்தையிலே வழிநடப்போம் - இறை
வார்த்தையிலே வாழ்வமைப்போம்
வார்த்தை இறைவார்த்தை
வாழ்க்கை இறைவாழ்க்கை
ஆமென் அல்லேலூயா, ஆமென் ஆமென் அல்லேலூயா
(வார்த்தையிலே ...)

1. பாறைமேலே கட்டினால் வீட்டை
வார்த்தையாலே அமைத்தால் வாழ்வை - 2
மழையும் பெய்தது; வெள்ளம் எழுந்தது - 2
வீட்டை நனைத்தது; அழிவைக் கொடுத்தது
விழவில்லை! விழவில்லை!! அந்த வீடும் விழவில்லை
(வார்த்தையிலே ...)

2. மணலின்மேலே கட்டினால் வீட்டை
வார்த்தையின்றி அமைத்தால் வாழ்வை - 2
மழையும் பெய்தது; அழிவைக் கொடுத்தது - 2
வீட்டை நனைத்தது அழிவைக் கொடுத்தது
நிற்கவில்லை! நிற்கவில்லை! அந்த வீடும் நிற்கவில்லை
(வார்த்தையிலே ...)

விளக்கம் சொல்லலாம்.

**நம்பிக்கையாளரின் மன்றாட்டுகள்**

அன்புக்குரியோரே, கடவுளின் உடனிருப்பை எதிர்நோக்கும் நாம் அவரது வார்த்தைகள் அடங்கிய திருவிவிலியத்தை நம் இல்லத்தில் (நிறுவனத்தில்) அரியணையேற்றி வைத்துள்ளோம். இறை வார்த்தையை நம் வாழ்வாக மாற்ற நல்வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டு, நமக்கும் அடுத்திருப்போருக்கும் பயன்தர வாழ்வோம் என்ற உறுதியோடு நமது மன்றாட்டுகளை இறைவனிடம் சமர்ப்பிப்போம்.

***பதிலுரை :*** (*வார்த்தையாக அல்லது பாடலாக*)

*வார்த்தையில் நிலைத்து வாழ்வதற்கு – யாம்*
*வைத்திட்ட மன்றாட்டைக் கேட்டருளும்*

**1. வாக்காய் இருக்கும் வள்ளலே இறைவா!**

'மறைநூலை ஏற்று; மனிதத்தைப் போற்று' என்று அனைத்துலகத் திரு அவையெங்கும் முழக்கமிட்டு இறைவாக்குப் பணிகளை இனிதே ஆற்றிவரும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், விவிலியப் பணித் துறையின் உலகத் தலைவர்கள், ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவோர் மற்றும் பொதுநிலையினருக்கு இறைவார்த்தைப் பணியின் இன்றைய தேவையை எடுத்துரைத்து, இப்பணியில் அவர்கள் இன்னும் விரைவு காட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**2. 'இல்லந்தோறும் இறையாட்சி' என்ற இலக்கில் எம்மை செயல்படத் தூண்டும் இறைவா!**

இன்று இந்த இல்லத்தில் (நிறுவனத்தில்) அரியணையேற்றி வைக்கப்பட்டுள்ள உமது அருள்வாக்கின் ஆற்றலால் நாங்கள் எதிர்நோக்கிக் காத்திருக்கும் நலமான வளமான வாழ்வினை அடைந்து சான்று பகர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. எம்மைச் சீர்படுத்தி, இறைவாக்கின் பணியாளர்களாக வாழ எங்களை அழைத்த இறைவா!**

இறைவார்த்தைகளை எல்லா இடங்களிலும் ஆற்றலுடன் அறிவித்து, நாங்கள் விரும்பும் நன்னிலை மாற்றம் பெற நல்ல வழிமுறைகளைப் பின்பற்றவும் நாங்கள் செய்யும் இறைவாக்குப் பணியில் வெற்றிகாணவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**4. இறைவேண்டலால் எல்லாம் ஆகும் என்று எமக்கு எப்போதும் உணர்த்திக் கொண்டிருக்கும் இறைவா!**

இறைவார்த்தைப் பணிகளில் நாங்கள் சந்திக்கும் ஏராளமான சவால்களின்போது நாங்கள் நம்பிக்கையுடன் இறைவேண்டலை மேற்கொள்ளவும் அதன் வலிமையினால் தடைகள் அகன்று உமது வார்த்தைப் பணிகள் ஒளி பெறவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**5. நல்லுறவின் நாயகனே இறைவா!**

எம் நடுவில் உம் வாக்கு இருப்பதை நாங்கள் ஒவ்வொரு நொடியும் உணர்ந்து, இறையச்சம் கலந்த இலக்குகளை வகுத்துக் கொண்டு, முன்மதியுடன் செயல்பட்டு ஒவ்வொரு நாளும் உம் வாக்குகளை வாசித்து அதன்படி வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**மன்றாடுவோம் :** "நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்" (யோவா 15:7) என்று உம் வார்த்தையில் நிலைத்திருக்க அழைப்பு விடுக்கும் இறைவா. உம் மக்கள் நாங்கள் இப்போது உம்

திருமுன் சமர்ப்பித்த மன்றாட்டுகளை ஏற்று, பலனளித்துப் பாதுகாத்திட எங்கள் ஆண்டவர் கிறிஸ்து வழியாகவே உம்மை வேண்டுகிறோம். - ஆமென்.

***வழிநடத்துனர் (திருவிவிலியத்தை உயர்த்திப் பிடித்து)*** *: ஆறுதலின் ஊற்றான இறைவனது வாக்கு நம் அனைவரையும் நிலைவாழ்வை நோக்கி நிதமும் வழிநடத்துவதாக. ஆமென்.*

இயேசு கற்பித்த மன்றாட்டு சொல்லப்படுகிறது.

எல்லாரும் ஆளுக்கொரு பூவை எடுத்துக் கொண்டுபோய் அரங்கேற்றம் செய்து வைக்கப்பட்டுள்ள திருவிவிலியத்திற்கு அருகில் வைக்கலாம்.

இறைவார்த்தை மானிட உடலேற்புக்குத் துணைநின்ற அன்னை மரியாவை நோக்கி ஒரு பாடல் இசைத்தலுடன் திருவிவிலிய அரியணையேற்றம் நிகழ்வு நிறைவு பெறும்.


## தமிழ்நாடு விவிலிய, மறைக்கல்வி, திருவழிபாட்டுப் பணிக்குழு

**முப்பணி மையம், திண்டிவனம்**

### மறைக்கல்விப் பணிக்குழு

**26–27.10.2024 : கருத்தரங்கு : 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் 4 கொள்கைத் திரட்டுகள்**

**பங்கேற்போர் : பொதுநிலையினர்**

### விவிலியப் பணிக்குழு

**29–30.10.2024 : கருத்தரங்கு : "2ஆம் வத்திக்கான் சங்கத்தின் 4 கொள்கைத் திரட்டுகள்**

**பங்கேற்போர் : குருக்கள்**

### திருவழிபாட்டுப் பணிக்குழு

**09–10.11.2024 : கருத்தரங்கு : 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் 4 கொள்கைத் திரட்டுகள்**

**பங்கேற்போர் : துறவியர்**

# பொருளுள்ள கொண்டாட்டத்திற்கு சில பரிந்துரைகள்

விவிலிய மாதக் கொண்டாட்டங்கள் முழு வெற்றி பெற, பங்கு அருள்பணியாளர், இருபால் துறவோர், ஆசிரியர்கள், வேதியர், கோவில் பணியாளர்கள், இளையோர், பங்கு விவிலியப் பணிக்குழு, பங்குத் திருவழிபாட்டுப் பணிக்குழு, பக்த சபையினர், அன்பியப் பொறுப்பாளர்கள் ஆகியோர் இணைந்து செயல்படுவது மிகவும் அவசியம்.

கிளைப் பங்குகளிலும் சிறப்பு ஏற்பாடுகள் செய்து விவிலிய மாதத்தைக் கொண்டாடுவது வரவேற்கத்தக்கது.

தங்கள் பகுதியில் இடம்பெறும் விவிலிய மாதச் சிறப்பு நிகழ்வுகளை, புகைப்படங்கள் மற்றும் செய்திகளை Whatsapp மூலம் அனுப்பி வைக்கவும்.

**விவிலிய மாதம் / வாரம் / ஞாயிறு**

1. *சுவரொட்டிகள் தயார் செய்து ஆங்காங்கே மக்கள் பார்வைக்கு வைத்தல் [முடிந்தவரை பிளாஸ்டிக் தவிர்க்கவும்].*
2. *பதாகைகள் தயார் செய்து கையில் ஏந்தலாம்; ஆலயத்தில், வளாகத்தில் தொங்கவிடலாம்.*
3. *செப்டம்பர் மாதம் முழுவதும் திருப்பலிக்கு முன்பும் பின்பும் ஆலயத்தில் ஒலிபரப்பப்படும் பாடல்கள் இறைவார்த்தையை மையமாகக் கொண்டு அமையும்படியாக பார்த்துக் கொள்ளலாம். VBS பாடல்களையும் பயன்படுத்தலாம்.*
4. *விவிலிய வாரம் முழுவதும் [ஞாயிறு தவிர] மாலை நேரத்தில் திருப்பலிகள் நிறைவேற்றலாம். கொடுக்கப் பட்டிருக்கும் சிந்தனைகளின் அடிப்படையில் திருப்பலி, பகிர்வுகள் நடைபெறலாம். அந்தந்தக் குழுக்கள் திருப்பலியைச் சிறப்பிக்கலாம்.*
5. *விவிலிய ஞாயிறு மற்றும் விவிலிய வாரத் திருப்பலிகளில் விவிலியம் / புதிய ஏற்பாடு இவைகளை காணிக்கையாகச் செலுத்தி அவைகளை ஏழைகளின் / மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்கு இலவசமாக வழங்கலாம்.*
6. *விவிலியக் கண்காட்சிகளுக்கு ஏற்பாடு செய்யலாம். இந்த விவிலியக் கண்காட்சிகள் நிரந்தரமாக இருக்கவும் ஏற்பாடு செய்யலாம்.*

7. விவிலியக் கட்டுரைகள், விவிலியம் சார்ந்த பத்திரிகைகள், விவிலிய படக்கதைகள், விவிலிய ஒலி – ஒளித் தகடுகள் வாங்கி வீடுகளுக்கு / குழந்தைகளுக்கு விற்பனை செய்யலாம். இதற்கு மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுவிடம் தொடர்பு கொள்ளவும்.

8. விவிலிய மாதத்தில் / வாரத்தில் ஒரு நாள் அல்லது ஒவ்வொரு நாளும் 'விவிலிய மாலை'யை கொண்டாடலாம். விவிலியம் சார்ந்த சொற்பொழிவுகள், வினாடி வினா, மனப்பாடப் போட்டி, மாறுவேடப் போட்டி, விவிலிய நாடகங்கள், விவிலிய கதாபாத்திரங்கள், கதைகள் பற்றிய திரைப்படங்கள் என்று ஒவ்வொரு நாளும் சிறப்பாகக் கொண்டாடலாம்.

9. விவிலியத்திலிருந்து ஒரு வாக்கியம் சொன்னால் புன்சிரிப்போடு கூடிய கைதட்டல் கொடுத்துப் பாராட்டலாம்.

10. வீடுகளிலும் நிறுவனங்களிலும் விவிலியத்தை அரியணையேற்றுதல். குடும்பக் கொண்டாட்டங்களில் வாசித்து, செபித்தல்.

11. ஒரு நாளைக்கு ஒரு வசனம் வீதம் முப்பது நாள்களும் முப்பது விவிலிய வசனங்களை வீட்டிலுள்ள அனைவரும் மனப்பாடம் செய்ய ஊக்குவிக்கலாம். அவ்வசனங்களை வசதியான இடங்களில் அனைவருடைய பார்வையிலும் படும்படியாக எழுதி ஒட்டலாம்.

12. விவிலிய ஞாயிறன்று சிறப்பான திருப்பலிக் கொண்டாட்டம். நாள் முழுவதும் பல்வேறு போட்டிகள், அன்று மாலை விவிலியக் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்.

13. செப்டம்பர் மாதத்தில் வீடு, கோவில், பள்ளிகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் வாயில்களில் விவிலியத்தோடு தொடர்புடைய (புதுமைகள், போதனைகள், உவமைகள்) கோலங்கள் வரையலாம் (உதவிக்கு VBS மாணவர் பயிற்சியேட்டு வரிப்படங்களையும் பயன்படுத்தலாம்).

14. செப்டம்பர் மாதம் அலைபேசித் தொடர்புகளில் சிறிய இறைவாக்கியத்தைப் பயன்படுத்தலாம்.

15. செப்டம்பர் மாதம் முழுவதும் இரவு குடும்ப இறை வேண்டலில் இறைவார்த்தையைப் பயன்படுத்தலாம்.

## 2. வருடம் முழுவதும் விவிலியத்தைச் சிறப்பிக்கச் சில பரிந்துரைகள்

- விவிலிய வழிபாடுகள் மற்றும் குழுத் திருப்பலிகள் கொண்டாடுதல்.

- விவிலிய பேட்ஜ், ஸ்டிக்கர் தயாரித்து வழங்குதல்.
- இறைவார்த்தைப் பகிர்வுக் குழுக்களை நடத்துதல்.
- அன்பியங்களில் விவிலிய நாளைக் கொண்டாடுதல்.
- விவிலியத்தைச் சலுகை விலையிலோ, இலவசமாகவோ வழங்க நன்கொடையாளர்களை இனம் காணுதல்.
- விவிலியம் பரிசளித்தல்.
- ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் ஒலி பெருக்கி வழியாக இறைவார்த்தையை முழக்கம் செய்தல், விவிலியப் பாடல்களையும், நிகழ்ச்சிகளையும் ஒலி பரப்புதல், விவிலிய வாரக் கொண்டாட்ட நிகழ்வுகளையும் நினைவூட்டி அறிவித்தல்.
- விவிலிய விளையாட்டுகள், வினாடி–வினாப் போட்டிகள், விவிலிய கதாபாத்திரங்களாக நடித்தல், விவிலியப் பகுதிகளை மனப்பாடம் செய்து ஒப்பித்தல், விவிலிய நாடகங்களை நடத்துதல், விவிலியக் கண்காட்சிகள் அமைத்தல்.
- விவிலியத்தில் உள்ள நபர்கள், இடங்கள், நிகழ்வுகளைக் குறித்து விடுகதைகள் தயாரித்தல்.
- கிராமியக் கலைகள் வழியாக (நடனம், கும்மி, கோலாட்டம், மயிலாட்டம், பட்டிமன்றம், ஒயிலாட்டம், வில்லுப்பாட்டு, கதாகாலட்சேபம்) விவிலிய நிகழ்ச்சிகளை வழங்குதல், விவிலியப் பாடல்களைப் (VBS) பயன்படுத்துதல்.
- விவிலியத் திரைப்படங்களைத் திரையிடுதல்.
- விவிலியக் குடும்பங்களின் பெயர்கள், இறைவார்த்தையில் வாழ்ந்த புனிதர்களின் படங்கள் திரையில் எழுதி அறியச் செய்தல்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான விவிலியம் வழங்குதல். (எ.கா) பார்வையற்றோருக்கான புதிய ஏற்பாடு + திருப்பாடல்கள் உள்ளன. உங்கள் மறைமாவட்டச் செயலர்களைத் தொடர்பு கொண்டு திண்டிவனம், விவிலியப் பணிக்குழுவிடமிருந்துப் பெற்றுக்கொள்ளவும்.
- இளைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும் தனித்தனியாக விவிலிய முகாம்கள் நடத்துதல். பங்கை விட்டு வெளியே சென்றும் நடத்தலாம்.
- பேனா, நோட்டு மற்றும் பரிசுப் பொருள்களில் இறைவார்த்தை Stickers ஒட்டுதல்.
- திருப்பலியில் காணிக்கைப் பவனியின்போது ஏழைகளுக்காக விவிலியப் பிரதிகளைக் காணிக்கையாக அளித்தல்.

- மக்களின் பயன்பாட்டிற்காக கோவில்களில் விவிலியங்களை வைத்தல்.
- விவிலிய வசனங்களுக்கு ஏற்ற படம் வரைந்து வசனத்தை எழுதுதல் (திராட்சைச் கொடி – கனிகள்).
- விவிலிய விளக்கவுரைகள் மற்றும் கட்டுரைகளைத் தாங்கி வரும் (**வழிகாட்டும் தோழன், விவிலிய விருந்து** போன்ற) பத்திரிகைகளை பங்கிலும், வீடுகளிலும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்வது. கட்டுரைகளை வீடுகளில், அன்பியங்களில் விவிலியக் குழுக்களில் வாசித்துப் பகிர்ந்து கொள்வது, மற்றவர்களையும் வாசிக்க வைப்பது.
- விவிலியப் பணிக்குழு, விவிலிய குழுமங்கள், விவிலிய நண்பர்கள், விவிலிய பணியாளர்கள், தன்னார்வப் பொது நிலையினர் என்று மறைமாவட்ட மற்றும் பங்குத் தளங்களில் விவிலிய மேய்ப்புப் பணிக்கான அமைப்புகளை உருவாக்குவது.
- உருவாக்க நிகழ்வுகள் : விவிலிய தலைப்புகளில் உரைகள், விவிலியச் செப வழிபாடுகள், விவிலியம் கற்கும் குழுக்கள், விவிலியப் பகிர்வுக் குழுக்கள், பங்கிலுள்ள சபைகள் மற்றும் குழுக்களுக்கான விவிலியக் கருத்தரங்கு (ஒவ்வொரு மாதமும் ஒரு ஞாயிற்றுக்கிழமை) இளையோருக்கான விவிலிய முகாம்கள்.
- அக்கம் பக்கமுள்ள குடும்பங்களைச் சந்தித்து விவிலியம் வாசிக்க ஊக்கப்படுத்துவது மற்றும் அவர்களுடைய தேவைகளுக்காக அவர்களோடு இணைந்து செபிப்பது.
- விவிலிய வங்கி உருவாக்குதல். 'எனக்கொரு விவிலியம், இதோ! உனக்கொரு விவிலியம்' என்ற அடிப்படையில் விவிலியம் வாங்க வசதி இல்லாதவர்களுக்கு குறைந்த விலையில் அல்லது இலவசமாக வழங்க ஏற்பாடு செய்தல்.
- பிறந்த நாள், புது நன்மை, உறுதிப்பூசுதல், திருமணம் மற்றும் ஜூபிலி போன்ற கொண்டாட்டங்களின்போது விவிலியத்தை அன்பளிப்பாக வழங்குதல்.
- சூழ்நிலைகளைப் பொறுத்து சிறைக் கைதிகளுக்கு விவிலியம் வழங்குதல்.
- அஞ்சல் வழி விவிலியக் கல்வி, இணையவழி விவிலிய வகுப்புகள் மற்றும் விவிலிய கருத்தரங்குகளில் பங்கெடுத்தல். விவரங்களுக்கு: விவிலியப் பணிக்குழுச் செயலர், முப்பணி மையம் (TNBCLC), திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் – 604 001. அலைபேசி : 63 81 24 77 10.
- மதம் சார்ந்த மற்றும் மதம் சாரா பத்திரிகைகளில் விவிலியத் தலைப்புகளில் அல்லது விவிலியம் காட்டும் விழுமியங்கள் குறித்து கட்டுரைகள் எழுதுவது.

- பங்குகளில் அல்லது மறைமாவட்டத்தில் விவிலிய நூலகம் அமைப்பது.
- கொடி ஏற்றி விவிலியக் கொண்டாட்டங்கள் / விழாக்கள் நடத்துவது. விவிலியத் தேர் பவனி, நற்செய்திப் பெருவிழா கொண்டாட்டம், கிராமப்புற விவிலியப் பறைசாற்றல்.
- விவிலியம் காட்டும் விழுமியங்கள் மற்றும் தலைப்புகளில் பங்குகளிலும், மறைமாவட்டங்களிலும் தியானங்கள் வழங்குவது.
- இறைவார்த்தையை பறைசாற்றுவது தொடர்பான யுக்திகளோடு, வழிபாடு மற்றும் விவிலியம் பற்றிய அடிப்படை அறிவு கொண்ட வாசகர்களாக பொது நிலையினருக்கு பயிற்சி அளிப்பது.
- வாட்ஸ் அப், பேஸ்புக், டுவிட்டர், யூடியூப், மின் குழுமம், இணைய தளம், தொலைக்காட்சி சானல்கள் போன்ற சமூகத் தொடர்புசாதனங்கள் மற்றும் சமூக தளங்களை பயன்படுத்துதல்.
- யூடியூப் சானல்கள் மற்றும் கத்தோலிக்கர் தொலைக்காட்சி சானல்கள் வழியாகவும் விவிலிய பகுதிகளைப் பற்றிய ஆடல், பாடல் போட்டிகளை நடத்துவது.
- ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விவிலியப் புத்தகமாக எடுத்து அன்பியங்களில் விவிலிய வினாடி வினா நடத்துதல். சிறிய பரிசுகள் அன்பியங்கள் சார்பாக வழங்குதல்.
- பங்குகளில் போட்டிகள் நடத்தி பொருள்களுக்குப் பதிலாக விவிலியம் சார்ந்த பத்திரிகைகளை ஒரு வருட சந்தா, மூன்று வருட சந்தா, ஆயுள் சந்தா என்று பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்தல்.
- பள்ளி கூடுகையின்போது விவிலிய வாக்கியங்களை வாசித்தல். டிஜிட்டல் திரைகளில் விவிலிய வசனங்களைக் காட்டுவது. விவிலிய நாடகங்கள் மூலம் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் விவிலியம் வாசிக்க ஆர்வத்தை ஏற்படுத்துவது.
- பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பை முடித்து செல்லும் மாணாக்கருக்கு விவிலியத்தைப் பரிசாக வழங்குவது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் விவிலியம் கற்கும் குழுமங்களை உருவாக்குவது.
- பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு கோடை விடுமுறையில், விடுமுறை விவிலிய வகுப்புகள் நடத்துவது.

**வழிகாட்டும் தோழன் மாத இதழை வாங்கிப் பயன்பெறுவீர்!**

**தொடர்புக்கு**
**தோழன் ஆசிரியர்**
**முப்பணி மையம் (TNBCLC)**
**திண்டிவனம் - 604 001**
**விழுப்புரம் மாவட்டம்.**

| | | |
|---|---|---|
| ஒரு வருட சந்தா | - | ரூ. 200 |
| மூன்று வருட சந்தா | - | ரூ. 500 |
| ஐந்து வருட சந்தா | - | ரூ. 750 |
| ஆயுள் வருட சந்தா | - | ரூ. 2500 |

**தோழன் சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
**தோழன் டிரஸ்ட்,** TNBCLC,
53/A6 மரக்காணம் ரோடு, தபால் பெட்டி எண். 11
திண்டிவனம் – 604 001. அலைபேசி : 63 81 50 31 06
**காசோலை :** "THOZHAN TRUST" **(அல்லது)**

| | | |
|---|---|---|
| Bank | : | IOB |
| Branch | : | Tindivanam |
| A/C Name | : | Thozhan Trust |
| A/C No | : | 171002000000265 |
| IFS Code | : | IOBA0001710 |

என்றும் அன்புடன்

**அருள்பணி. S. ஸ்தனிஸ்லாஸ்**
*பொதுச்செயலர்,*
*தமிழக விவிலியப் பணிக்குழு,*
*முப்பணி மையம், திண்டிவனம்*

வெளியீடு

**அருள்பணி. A. ஜான் பிரிட்டோ பாக்கியராஜ்**
இயக்குநர்,
முப்பணி மையம், திண்டிவனம் - 604 001.

# விவிலியக் கட்டுரைப் போட்டி!

## தலைப்புகள்

பெரியோர்

**இறைவார்த்தையும் இல்லற வாழ்வும்**

இளையோர்

**"இயேசுவின் சீடராக நான்..."**

துறவறத்தார்

**இறைவார்த்தையும் என் அர்ப்பண வாழ்வும் பணியும்**

**நினைவில் நிறுத்துக :**

**(ஒவ்வொரு குழுவுக்கும்)**

**முதல் பரிசு : ரூ. 3000/-**
**இரண்டாம் பரிசு : ரூ. 2000/-**
**மூன்றாம் பரிசு : ரூ. 1000/-**
**மற்றும் 5 நபர்களுக்கு ஆறுதல் பரிசுகளும் கொடுக்கப்படும்.**

1. 5 பக்கங்களுக்கு மிகாத கையெழுத்துப் பிரதியாக இருத்தல் வேண்டும். படங்கள் வரைவதையும், ஒட்டுவதையும் தவிர்க்க வேண்டும்.
2. சரியான முகவரியும் அலைபேசி எண்ணும் கொடுப்பது அவசியம்.
3. திருவிவிலியம் பொதுமொழிபெயர்ப்பை மட்டும் பயன்படுத்த வேண்டும்.
4. விவிலிய மேற்கோள்கள் இடம் பெற்று, விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.
5. வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **31.10.2024**
6. அனுப்ப வேண்டிய முகவரி :

**அருள்பணி. S. ஸ்தனிஸ்லாஸ்**
செயலர், தமிழக விவிலியப் பணிக்குழு
53/A6 மரக்காணம் ரோடு,
அஞ்சல் பெட்டி எண் 11,
முப்பணி மையம், திண்டிவனம்